

# திறவுகோல்

மார்கழி 2049

மாத இதழ்

வெளியீடு

**மன்னையின் மைந்தர்கள் அமைப்பு**

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# தற்சார்பே தற்காப்பு



G.S. விஜயவர்மன்

சில பாடங்களும், சில புரிதல்களும் நாம் அனுபவிக்கும் துன்பங்களிலிருந்து தான் வெளிப்படுகின்றன. கடந்த மாதம் காவிரிப்படுகை மாவட்டங்களை உலுக்கிய கஜா புயலும் நமக்கு நல்லதொரு பாடத்தை புகட்டிவிட்டு தான் சென்றுள்ளது. நாம் தொலைத்த தற்சார்பு வாழ்க்கை முறையை இந்த புயல் நமக்கு நினைவூட்டி சென்றுள்ளது.

ஆங்கிலத்தில் Self Sustainable Life என்று சொல்லக்கூடிய தற்சார்பு வாழ்க்கை முறையானது நம் தமிழினத்தின் மூலாதாரம். மன்னிக்கவும்! தமிழினம், முன்னோர்கள், மூதாதையர்கள் போன்ற வார்த்தைகளை பயன்படுத்தினால் இக்கால நாகரீக மனிதர்கள் அதனை விரும்புவதில்லை. ஆதலால், அவர்களுக்கும் இக்கருத்து சென்று சேரும் வகையில் மேலும் விவரிப்போம்.

புயல் பாதிப்புக்கு பின், திருவாரூர் மாவட்டங்களின் பல பகுதிகளில் சாலை மறியல்கள் நடந்தேறிய வண்ணமிருந்தது. இருப்பினும், அதிக பாதிப்புகளை உள்ளடக்கிய நாகை மாவட்டத்தின் வேதாரண்யம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் பெருமளவில் அவ்வாறான சாலை மறியல்கள் ஏதுமில்லை. ஒருபுறம் இந்த சாலை மறியல்களின் பின் சில அரசியல் காரணிகள் இருந்தாலும், மற்றொருபுறம், நாம் உற்று நோக்க வேண்டிய வேறொரு காரணியும் இங்குள்ளது.

சாலை மறியல்களில் பெரும்பாலும் மக்கள் முன்வைத்த கோரிக்கை, குடிப்பதற்கு தண்ணீர் வேண்டுமென்பதே. மின்சாரம் இல்லாமல் திருவாரூர் நகரத்தை சுற்றியுள்ள பகுதிகளில் தண்ணீர் பிரச்சனை தலைவிரித்து ஆடும்பொழுது, மிகுந்த பாதிப்புள்ள வேதாரண்யம் நகரத்தை சுற்றியுள்ள பகுதிகளின் நிலை என்னவானது.?
நிஜத்தில், அங்கே தண்ணீர் தட்டுபாட்டினால் யாரும் திண்டாடவில்லை. காரணம், அந்த பகுதிகளில் உள்ள கிராமங்களில் வீட்டுக்கு வீடு Prime water pump என்று சொல்லக்கூடிய அடி பம்ப் உள்ளது. மின்சாரம் இல்லாமல், எளிதாக நீரை இறைத்து உபயோகித்தனர். கடல் அருகாமையில் இருப்பதால் தண்ணீர் சற்று உப்பாக இருப்பினும், அதனை கொதிக்க வைத்து பயன்படுத்திக் கொண்டனர்.

இங்கே நாம், மழைநீரை சேமிக்க மறந்தோம்! மின்சாரத்தின் உதவியுடன் மோட்டார் வைத்து நிலத்தடி நீரை உறிஞ்சினோம்!! விளைவு? 15 நாட்கள் குடிக்க நீரின்றி பரிதவித்தோம்.

முற்காலத்தில் வாழ்ந்த மக்கள், யாரையும் எதிர்பார்த்து வாழவில்லை. தங்களுடைய தேவைகளை முடிந்த வரையில் தாங்களே பூர்த்தி செய்து கொண்டனர். மானிய

விலையில் கேஸ் சிலிண்டரை அவர்கள் எதிர்பார்க்கவில்லை! விறகு வெட்டி, அதனை எரித்து, உணவு செய்து, உண்டு வாழ்ந்தனர். வெட்டப்பட்ட மரக்கிளைகள் எரிந்து பயனளித்தாயினும், பாரமாய் இருந்து புயலில் அந்த மரங்களை சாய்க்கவில்லை.

குடி தண்ணீருக்கு மின்சாரத்தையோ, அரசாங்கம் அமைத்து கொடுக்கும் தண்ணீர் குழாய்களையோ அவர்கள் எதிர்பார்க்கவில்லை! நீரை நிலத்தின் மேற்பரப்பிலும், நிலத்திற்கடியிலும் சேமித்து பயன்படுத்தினர். அங்கே சாலை மறியல்கள் அரங்கேறவில்லை!

வீட்டிற்கு ஒளியேற்ற அங்கே மின்சாரத்தை எதிர்பார்க்கவில்லை! காற்றுக்கு மின்விசிறி, ஏசி போன்ற மின் சாதனங்களை அவர்கள் சார்ந்து வாழவில்லை! இக்காலக்கட்டத்தில், மின்சாரம் இல்லாமல் வாழ முடியாதெனினும், முடிந்தவரையில் சூரிய மின் தகடுகளை (Solar Power Panels) பயன்படுத்தலாம். பெரிய முற்றம் வைத்த வீடுகள் கட்ட முடியாவிட்டாலும், அகண்ட சன்னல்களை கொண்ட காற்றோட்டமான வீடுகளை கட்ட இயலும்.

இனி வரும் காலங்களில், இயற்கை உபாதைகள் நிறைய ஏற்படக்கூடும். அவற்றிலிருந்து நாம் துன்பப்படாமல் வாழவேண்டுமெனில், தற்சார்பு வாழ்க்கை முறை இங்கே இன்றியமையாத தேவை. தொழில்நுட்ப வளர்ச்சி நமக்கு அத்தியாவசியமெனினும், முற்கால மனிதர்கள் நமக்கு விட்டுச்சென்ற வாழ்க்கை முறையையும், நமது வாழ்வாதாரத்தையும் அந்த வளர்ச்சி அழித்துவிடக்கூடாது.

தொழில்நுட்ப வளர்ச்சியில் எவ்வளவு வேகமாக முன்னேறுகிறோம் என்பதை விட, நம் பழம்பெருமைகளை அடுத்த தலைமுறையினருக்கு எவ்வாறு எடுத்து செல்கிறோம் என்பது மிகவும் கவனிக்க வேண்டிய ஒன்று. ஏழெட்டு, பிள்ளைகளை பெற்றெடுத்த பாட்டன்கள் வாழ்ந்துக் கொண்டிருக்கும் இதே மண்ணில், முட்டி, மோதி டெஸ்ட் டியூப் முறையில் ஒற்றைக் குழந்தை பெற்றெடுக்கும் அவன் பேரன் நோய்வாய்பட்டு செத்து மடிகிறான். இது வளர்ச்சியா? வீழ்ச்சியா??

தற்சார்பு வாழ்க்கை முறையையும், அதன் சாதக பாதகங்களையும் இந்த கஜா புயல் நமக்கு நினைவூட்டிச் சென்றுள்ளது. இனியும் தாமதித்தால், இன்னும் சில பாடங்களை கற்றுக் கொடுக்க இயற்கை இங்கே காத்துக் கொண்டு தான் இருக்கிறது.

விழிப்போம்! வளர்வோம்!!

--

G.S. விஜயவர்மன்

# தொலையும் விடியல்கள் (சிறுகதை)

அதிகாலை ஐந்து மணி.

வீட்டுக்கும் தெருவுக்கும் இடைப்பட்ட அந்த வெளியில் தன் காலைக் கனவினில் மூழ்கியிருந்தான். மே மாதத்தின் கடைசி இரவுகளில் வீட்டின் முன்புதான் படுத்திருப்பான். அந்த புதிய வீதியோர மின் விளக்கு கம்பத்தின் துணையோடுதான் அவனது இரவுகள் கழிந்தன. அந்த சாலை வீட்டின் ஒற்றைச் சிற்றறையில் அவனது தாயும் தங்கையும் நெருக்கிக்கொண்டு படுத்திருந்தனர்.

அமைதியான உறக்கத்தில் இருந்தவனின் உடல் குலுங்கியது. தன்னிலைக்கு வருவதற்கு தன் கண்களை உறக்கத்தினின்று விடுவித்துக்கொண்டான். விழித்துக் கொண்டபோது அந்த மின்விளக்கின் ஒளியை மறைத்துக்கொண்டு குண்டான முகம்கொண்ட உருவம் அவனை அழைத்தப்படியிருந்தது.

‘சுந்தரு.. சுந்தரு.. எழுடா.’
‘சித்தே என்னா சித்தே..?’
‘மூஞ்ச கழுவிகிட்டு வாடா எங்கூட.’
‘எங்க சித்தே.?’

‘எனக்கு இன்னிக்கி வேற ஒரு வேல இருக்குடா. நான் இன்னிக்கு வேலைக்கு போவ முடியாது. அதனால நீ எனக்கு பதிலா வேலைக்கு போவுனும். அதான். வாடா.’

‘குப்ப அள்ளுறதுக்கா.? சித்தே, நான் வரல சித்தே. நீயே போ.’

‘டேய் வாடா. இன்னிக்கு மட்டுந்தா. நான் உனக்கு கூலிப்பணம் குடுக்குறன்டா.’ ஆசைக்காட்டினார்.

‘எனக்கு வேணாம். நான் வரல. நீயே போ சித்தே.’ மறுத்து நின்றான்.

‘டேய் ஸ்கூல் லீவுல வீட்டுலதான இருக்க. எனக்கு பதிலா போனா என்னடா.?’ அதட்டினார்.

‘வேணாம் சித்தே.’

‘நம்பளுக்கு இந்த காலத்துல இந்த வேல கெடைக்கிறதே பெருசு. நீயென்றான்னா வரலங்கிறியே. நம்பளுக்கு இதவுட்டா தினமும் கெடைக்கிற வேல வேற எதுவும்

இல்ல. வாடா.’ சித்தி விடுவதாய் இல்லை. தனக்கு பதில் இன்னொருவரை அனுப்பவில்லை எனில் மேஸ்திரி திட்டுவார் என்றார்.

காலை ஆறு மணி.

சித்தி அவனுடன் வந்து மேஸ்திரியிடம் சொல்லி விட்டுவிட்டு சென்றுவிட்டார். அவன் கையில் குப்பைக்கூடை கொடுக்கப்பட்டிருந்தது. மற்ற பணியாளர்களும் இருந்தனர். இவனைப் புதுவரவு என்று கூறினர். அந்த வேளையிலேயே போதையிலிருந்தனர்.

அவர்களது கைகளில் மம்முட்டிகளும் சூலம், கோடாரி போன்ற வகையாளான உபகரணங்கள் இருந்தன. அவன் மனம் பதறிக் கொண்டிருக்க அவனை டிராக்டர் வண்டியில் ஏற்றிக்கொண்டு புறப்பட்டனர். பத்து நிமிடத்தில் குப்பை நிறைய இருந்த கூலத்திற்கு பக்கமாக வண்டி நின்றது.

மம்முட்டிகள் அதை வெட்டி வெட்டி கூடைகளில் நிரப்பின. கூடைகள் குப்பையை வண்டியில் கொண்டு வந்து கொட்டின. அவனால் குப்பையை சுலபமாக தூக்கிக் கொட்ட முடிந்தது. அதிலிருந்து வந்த வாடை அவனை மூக்கைத் துணியால் மூடவும் மம்முட்டி பிடித்திருந்தவர்கள் போதையில் இருந்ததால் அவர்களிடமிருந்து வந்த மதுவாடை அவனை முகம் சுழிக்கவும் வைத்தது.

அவன் எப்போதும் நிறைய கேள்விகளைக் கேட்கும் இயல்புள்ளவன். இப்போது அவன் யாரிடமும் அதிகம் பேசவில்லை. வேலையை மட்டும் சரியாக செய்தபடியிருந்தான். இடங்கள் பல மாறினர். வண்டியில் குப்பையும் நிரம்பியது. அவனால் குப்பையின் வாடையைவிட மதுவின் வாடையைத்தான் தாங்க முடியவில்லை. வாடைகளின் தொகுப்பு அவனை திணறடித்தன. சிறிது நேரம் ஓய்வு. அந்த நேரம் அங்கிருந்த ஒரு பெரியாளிடம் மம்முட்டிக்காரர் ஒருவர் நெளிந்தார்.

‘சரி சரி. இந்தா இத வச்சி எல்லாரும் டீ சாப்புடுங்க.’ ஐம்பது ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து கொடுத்தார். எல்லோருக்கும் டீ சிறிது நேரத்தில் வந்தது. டீ அருந்தும் நேரத்தில் நிகழ்ந்தது அந்த உரையாடல்.

‘ஏன்னா குடிச்சிட்டு வேலைக்கு வர்றிங்க.?’

‘தம்பி புதுசில்ல. அதான் கேக்குறாரு. ம்... சொல்றேன். நாம அள்ளுறது குப்பை. அது ஊருக்கு. ஆனா நாம அள்ளுறது குப்பைய மட்டுமில்ல. அதோட நாத்தத்தையும் தான். இதை பொறுக்க முடியாம தான் காலைலன்னாலும் ஒரு ரவுண்டு போட்டுகிட்டு வர்றது. எல்லாத்தையும் சுத்தப்படுத்தனும் இல்லன்னா வேல முடியுமா.?’ என்றார் ஒருவர் டீயைக் குடித்துக்கொண்டே.

‘டீக்கு காசு தந்தாரே அவர் யார்.?’ எதேச்சையாகத்தான் கேட்டான்.

'இந்த வேலையில எல்லா ஆளுங்களும் இருக்கோம். ஆனா வேலை செய்றது மட்டும் நாமத்தான். வேலை வாங்கியவன் ஒருத்தன், வேலைய செய்றவன் ஒருத்தன். அதுக்குன்னு ஒரு கூலி தருவாங்க. அப்படி ஆள் சேத்து வேலைய பிரிச்சிவிடுறவர்தான் அவர்.' இன்னொருத்தர் சொன்னார்.

'அப்போ வேலை உங்களுக்கு வந்ததில்லையா.?'

'அப்படில்ல. நம்மாளுங்க பேர்ல அவங்க வேலைய வாங்குவாங்க. அதுக்கு மஞ்சப்பை கணம் வேணும். நமக்குதான் மஞ்சப்பையே இல்லாம ஆக்கிட்டாங்களே. அப்புறம் எப்படி நமக்கு வரும்.? நம்ம பேர்ல அவங்க வேலையில இருக்காங்க. அவங்க செய்ய வேண்டிய வேலைய நாம செஞ்சிக்கிட்டு இருக்கோம். இதான் நம்ம பொழப்பு.'

இதையெல்லாம் கேட்ட சுந்தர் மனதளவில் சுருங்கியிருந்தான். அவன் குப்பையை வாங்கி வந்து கொட்டுவதைவிட தன்னை யார் யாரெல்லாம் பார்க்கிறார்கள் என்றுதான் கவலைப்பட்டான். அவனது கவலைக்கு ஒரு காரணம் இருந்தது.

அவனது முகம் துண்டால் கண்மட்டும் தெரியுளவுக்கு மூடியிருந்தான். நேரம் ஆக ஆக மனம் விரக்தியடைந்துக் கொண்டிருந்தது. தான் குப்பை அள்ளுகிறதை அவன் மனம் ஏற்க மறுத்தது. இந்த ஊரே தனக்கு எதிராய் நிற்பதுபோல நினைத்தான்.

அவனது தலை பெரும்பாலும் குனிந்தேயிருந்தது. பார்வையில் பயமும் கவலையும் கலந்திருந்தன. தன்னை அந்த இடத்தில் இனி யாரெல்லாம் ஏளனப்படுத்துவார்களோ என்ற போராட்டம் ஆரம்பித்தது. மணி பத்தானது.

அடுத்து சாராய கோட்டம் போறோம் என்றார் டிராக்டர் ஓட்டுனர். அதைக் கேட்டதும் அவனுக்கு சரம்பட்டாசு மாலை அணிந்தது போலிருந்தது. எங்கு போகக்கூடாது என்று நினைத்தோமோ அங்கேயே போகிறோமே என்று துடிதுடித்தான்.

'அண்ணா அங்க போக வேணாம்ணா.' கெஞ்சினான்.

'ஏந்தம்பி.? என்னாச்சி.?'

'அங்க என்னோட பாட்டி இருக்காங்கணா. இதைப் பாத்தா கஸ்டப்படுவாங்கணா. அதான் வேணாம்னு சொல்றேன்.'

'உங்க பாட்டி அங்க என்னடா பண்றாங்க.?'
'அவங்க வீடு அங்கதான் இருக்கு.'

'அங்கயா.? அதெப்படி அங்க.?'

‘ஆமாண்ணா. வேணாம்னு மேஸ்திரிகிட்ட சொல்லுங்கணா.’

‘நாம அதெல்லாம் சொல்ல முடியாது தம்பி. மேஸ்திரியே கேக்க முடியாது, தெரியுமா.! அள்ளுன்னா அள்ளிற வேண்டியதுதான்.’ வண்டி நேராக அங்கு சென்றது.

அந்த கோட்டத்தில் குப்பை படு சுத்தமாக வாரப்பட்டது. வீதி முழுக்க குப்பை சேகரிக்கப்பட்டது. கொண்டு வந்திருந்த பிளீச்சிங் பவுடரை மூங்கில் கூடையில் கொட்டி வீதியோரங்களில் பூக்கள் வைக்கப்பட்டன. குப்பை வீதி பூ வீதியானது. அங்கே வேலை நடப்பதை வேடிக்கைப் பார்க்கவே வீட்டுக்கொரு பெண் வாசலில் நின்றனர். தன்னைத்தான் பார்க்கின்றனர் என்றே நம்பிவிட்டான் சுந்தர். மனம் அதிகமாக கனத்தது. முகத்தை நன்றாக மூடிக் கொண்டான். அவனது சக வயதினர் யாரும் பார்த்துவிடக் கூடாது என்று மிகவும் கவலைக் கொண்டிருந்தான். அவனது கவலைக்கு ஒரு காரணம் இருந்தது.

அவனது பாட்டியார் அவன் குப்பையள்ளுவதை எப்படியோ பார்த்துவிட்டார். அவரது வீட்டு வாசலிலேயே சரிந்துபோய் அழ ஆரம்பித்தார். அதைக் கண்டதும் சுந்தரும் கலங்கினான். வேலையை விட்டு பாட்டியிடம் சென்றான் கட்டிழந்தவனைப்போல.

‘அழுவாத ஆயா. இன்னிக்கு ஒருநாள் தான் இந்த வேல. இனிமே நான் செய்ய தேவையில்ல.’

‘படிக்கிற பையன இந்த வேல செய்ய வக்கிறாங்களே...’ என்று அழுதார். கலங்கிய கண்களுடன் பாட்டியின் வீட்டினுள்ளிருந்த அவனது தந்தையின் பூப்போட்டப் படத்தைக் கண்டான். கலப்புத் திருமணம் செய்து கொண்ட பெற்றோரில் தந்தை மட்டும் இவர்களை விட்டு திரும்ப முடியாத தன் நிரந்தர வீட்டிற்கு சென்றுவிட்டார். சுந்தரின் நிராயுத கண்ணீருக்கு யாரால் பதில் சொல்லக்கூடும்..!

மேஸ்திரி அழைத்தார். எழுந்து போன அவனை இரண்டு கண்கள் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தன. அதை அறிந்ததும் சுருங்கும் முகத்தை துண்டால் மூடிக்கொண்டான். உடல் குறுகினான். அந்த நொடிகளில் அவனுக்குள் மரண அவஸ்தை. கவலையின் உச்சத்தை அடைந்துவிட்டான். இவ்வளவிற்கும் ஒரு காரணமுண்டு.

அவன் தன்னை மற்றவர்கள் பார்ப்பதைக் கண்டுக் கொள்ளாதவனாய் காட்டிக்கொள்ள முயன்றான். அன்றைய நிகழ்வுகளை அவன் இதுவரை நினைத்து பார்த்ததில்லை.அவனுக்கு தற்போது ஒரே எண்ணம்தான்.

‘எப்போது வீட்டுக்கு போவது.?’

மதியம் வேலை முடிந்திருந்தது. ஞாயிறானதால் மதியம் லீவு. உடனே வீட்டிற்கு சென்றான். அம்மா வீட்டிலிருந்தார். அவனுக்கு அழுகையானது. கண்கள் மூழ்க

அழுதான். அவனை சமாதானப்படுத்த முயன்றார் அம்மா. அவரால் முடியவில்லை.

'ஏன்டா அழுவுற.? சொல்லுடா சுந்தரு.?'

'இனிமே என்ன எல்லாரும் கேலி பண்ணுவாங்க. நான் குப்ப அள்ளிக்கிட்டிருந்தத ஒருத்தன் பாத்துட்டான். இனி எல்லாருக்கும் தெரியப்போவுது. ஏற்கனவே நான் அவமானப் பட்டுக்கிட்டிருக்கேன். இனிமே எவ்வளவு அவமானப்படுத்தப் போறானுங்களோ தெரியல. நம்மள மட்டும் மதிக்கவே மாட்டேங்குறாங்க.'
'அவமானப்படுத்துறாங்களா..? எங்கடா.?'

'பள்ளிக்கூடத்துல..' என்றான் பட்டென.

அன்றைய நாள் கழிந்தது. அதே இடத்தில் உறங்கியபடியிருந்தான் சுந்தர். அவனை எழுப்ப வந்தார் சித்தி.

--
**கார்த்தி டாவின்சி**

---

# இல்லை

உரியவனுக்கு நிலம் இல்லை
உணர்ந்தவனுக்கு உயிர் இல்லை

விதையாண்மைக்கு விதை இல்லை
விதைத்தவனுக்கோ கோவனமும்
இல்லை

உணவுக்கு தானியம் இல்லை
உறக்கத்திற்கு நேரமும் இல்லை

கனவுக்குப் பஞ்சம் இல்லை
கடனுக்கு விடையும் இல்லை

படித்தவனுக்குப் பிழைப்பு இல்லை
நடிப்பவனுக்கு ஊதியம் போதவில்லை

கலவிக்கு கட்டுப்பாடு இல்லை
கிழவர்களுக்கு அரிதாரமும்
போதவில்லை

அத்தியாவசியத்திற்கு அறம் இல்லை
ஆடம்பரத்திற்கு அளவும் இல்லை

அறத்தை பழித்தவன் அழியவில்லை
அறத்தை போதித்தவனோ
வாழவில்லை



- பெ.மேகநாதன்

# அறிவோம் கட்டுமானம் - 2 (தமிழில்)

என்ன தம்பி என்ன படித்துக் கொண்டு (அல்லது) படித்துமுடித்துவிட்டு இருக்கீங்க?, நான் சிவில் இன்ஜினியரிங் (கட்டிட/கட்டுமான பொறியியல்) படித்துகொண்டு (அல்லது) படித்துமுடித்து இருக்கிறேன் ஐயா, அப்போ வீடு கட்டுற படிப்புன்னு சொல்லுங்க. இது பொதுவாகவே ஒரு கட்டுமான பொறியியல் படித்துகொண்டு இருக்கும் அல்லது படித்த பொறியாளர்கள் அன்றாட வாழ்வில் சந்திக்கும் ஒரு உரையாடல். எனது குடும்பத்தாருக்கும் கூட எனது வேலை பற்றி மேல் கூறிய எண்ணமே. யார் கேட்டாலும் அப்படியே என்னை என் குடும்பத்தாரும் அறிமுகம் செய்வார்கள். அனைவரின் பொதுவான பார்வை கட்டுமான பொறியாளன் என்றாலே ஒன்று கட்டிடம் கட்டுபவர் அல்லது ஏதாவது ஒரு அரசாங்க வேலை (பொதுபணிதுறை, நெடுஞ்சாலை துறை) செய்பவராகவே உருவகப்படுத்தபடுகிறது. இது சாதாரண பாமரன் முதல் அந்த துறையில் படிக்கும் மாணவர்களுக்கும் கூட இப்படி ஒரு எண்ணமே உள்ளது. இந்த கட்டுரையின் நோக்கம் அதை தாண்டி என்ன தான் இந்த துறையில் உள்ளது என்பதை அலசுவதே.

மனிதன் பூவுலகில் தோன்றி தன் வாழ்வியல் தேவை மற்றும் பாதுகாப்பு பற்றி சிந்தித்த கணம், உறைவிடத்தின் தேவையும் அதற்கான கட்டுமானமும் தொடங்கிவிட்டது. கட்டுமான பொறியியலின் வரலாறு மனித இனம் தோன்றிய காலத்திலேயே தொடங்கினாலும் இன்று நாம் கூறும் civil engineering (கட்டிட பொறியியல்) பெயர்காரண வரலாறு 18 ம் நுற்றாண்டில் தான் தொடங்கியது. 1747ம் வருடம் பிரான்ஸ் நகரத்தில் முதல் பொறியியல்சார்கல்வி நிறுவனமான தேசிய பாலங்கள் மற்றும் நெடுஞ்சாலை பயிலகம் (national bridges and highways schools) இன்றைய கட்டுமான பொறியியலின் (இதுவே நவீன உலகின் முதல் பொறியியல் கல்லுரி ஆகும்) தொடக்கப்புள்ளி ஆகும். இந்த கல்லூரியின் தற்போதைய பெயர் cole nationale des ponts et chausses or ENPC, பாரிஸ் மாநகரில் இன்றும் செயல்பாட்டில் உள்ளது. முதல் தனியார் பொறியியல் கல்லூரி 1819ம் ஆண்டு அமெரிக்காவில் நோர்விச் பல்கலைகழகம் தொடங்கியது.

இந்தியாவை பொறுத்தவரை 1794ம் ஆண்டு மதராஸ் மாகாணத்தில் (இன்றைய சென்னை) பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனமாக தொடங்கப்பட்ட முதல் பள்ளி, School of Survey என்ற பெயரில் ஒரே மாணவரை கொண்டு michael topping என்பவரால் புனித ஜார்ஜ் கோட்டையில் முதலில் தொடங்கப்பட்டது. பின்னர் 1858ல் கட்டிட பொறியியல் பள்ளியாக (civil engineering school) மாறி அது மேலும் 1859ல் Civil engineering college, guindy என்று பெயர் மாற்றம் பெற்று மதராஸ் பல்கலைகழகம் கீழ் இணைக்கப்பட்டது. 1861ம் ஆண்டு இயந்திர பொறியியலும் சேர்த்து இன்று வழக்கில் உள்ள பெயரான college of engineering, guindy, என்று பெயர்

மாற்றம் பெற்றது (http://ceg.annauniv.edu/history.html). இந்த பெருமை பறைசாற்றும் வகையில் 200ம் ஆண்டு நிறைவு தினத்தன்று (1994) தபால் தலை வெளியீட்டு இந்திய அரசாங்கம் பெருமைபடுத்தியுள்ளனர். இதனாலயே வடக்கை காட்டிலும் தெற்கு பொறியியலில் சிறந்து விளங்குகிறது போலும்.







நிறுவனம் என்ற முறையில் முதலில் தொடங்கப்பட்டு இருந்தாலும் கல்லூரி என்ற முறையில் 1847ம் ஆண்டு முதலில் தொடங்கப்பட்டது Thomason College of Civil Engineering, Roorkee. 1949ல் university of roorkee என்று பெயர் மாற்றம் பெற்று சுதந்திர இந்தியாவின் முதல் பொறியியல் பல்கலைக்கழகம் என்ற அந்தஸ்தையும் பெற்றுள்ளது. 2001ம் ஆண்டு இது மேலும் ஒருமுறை பெயர் மாற்றம் பெற்று இன்றைய Indian Institute of Technology, Roorkeeயாக உள்ளது.
(https://www.iitr.ac.in/institute/pages/Heritage.html)

முன்பு எல்லாம் இராணுவமே எல்லாவிதமான கட்டுமான பணிகளையும் செய்துவந்தது. போர் இல்லாத காலகட்டத்தில் நாட்டின் வளர்ச்சிக்கு தேவையான உள்கட்டமைப்பு (infrastructure development) வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டது. எனவே அக்காலத்தில் ராணுவ பொறியியல் (military engineering) என்று வழக்கில் இருந்தது. பின்னர் குடிமக்களின் தேவைக்கான கட்டுமான வேலை செய்ய தொடங்கியதால் ராணுவ கட்டுமானங்கள் அல்லாதவை அனைத்தும் குடியியல்சார் (civil) பொறியியல் அல்லது கட்டிட பொறியியல் என பெயர் வழக்கத்திற்கு வந்தது.

கற்றது கையளவு கல்லாதது உலகளவு என்பது நம் முன்னோர் பழமொழி இதையே ஆங்கில பழமொழியாக கூறப்படும் known is a drop, unkown is an ocean என்பது போல ஒரு சமுத்திரம் நிகராக பல துறைகளை ஒருங்கே கொண்டது தான் இந்த சிவில் பொறியியல் துறை. அப்படி என்னனென்ன துறைகள் உள்ளது அதில் இருக்கும் வேலைகள் பற்றிய விவரங்களை பார்க்கலாம். அடுத்தடுத்து  வரும் பதிவுகளில் நம் முன்னோர்களின் கட்டுமான பொறியியல் துறை பிரிவுகள் எப்படி இருந்தது அது எப்படி இன்றைய துறையோடு ஒற்று போகிறது அல்லது வேறுபட்டு நிற்கிறது என்றும் அலசலாம். இங்கு நான் வழங்கும் தகவல் பள்ளியில் படித்துக் கொண்டு இருக்கும் மாணவர்களுக்கு, பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு, ஆசிரியர்களுக்கு மற்றும் பெற்றோர்களுக்கும் தங்களின் குழந்தை படிப்பு மற்றும் வேலை நிமித்தமாக இந்த துறை பற்றி தெரிந்துக் கொள்ள உதவும் என்ற நோக்கில் என்னால் இயன்றவரை சற்று ஆழமாகவே எழுத முயன்றிருக்கிறேன்.

குடியியல்சார் (கட்டிட) பொறியியல் (சிவில் இன்ஜினியரிங்) என்பது பரந்த

பழமைவாய்ந்த நீண்டநெடிய வரலாறு கொண்ட ஒரு துறையாகும். இன்றளவும் இத்துறையில் தொழில்நுட்பங்கள் வளர்ந்துகொண்டே போகின்றது. நவீன வாழ்க்கையில் இன்றியமையாத செயற்கைக்கோள் ஏவுதளங்கள், கடல் கட்டமைப்புகள், பாலங்கள், கட்டிடங்கள், சுரங்கங்கள், நெடுஞ்சாலைகள், போக்குவரத்து அமைப்புகள், அணைகள், விமான நிலையங்கள், துறைமுகங்கள், நீர் வழங்கும் அமைப்பு மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலைகள் ஆகியவற்றை எண்ணகருத்தாக்கம் (conceive), திட்டமிடுவது (planning), வடிவமைப்பது (design), கட்டுமானம் செய்வது (construction), கட்டுமான மேற்பார்வையிடுவது (supervise), பின்னர் பராமரித்தல் (maintenance) என பட்டியல் நீண்டுகொண்டே போகும். அறிவியலும் கணிதமும் ஈன்றெடுத்த குழந்தை, செயல்முறை அறிவியல் (applied science) என்று அழைக்கப்படும் தொழில்நுட்ப பொறியியல். அதில் மூத்த குழந்தையே இந்த துறை என்றால் மறுப்பார் யாரும் உண்டோ?. 17 பெரும் கிளைகளையும் அதனுள் பல துணைகிளையுமாக வளர்ந்துள்ளது, மேலும் இன்றைய கால சூழலில் அந்த 17 பெரும் கிளைகளுக்குள் மேலும் பல கலப்பு ஏற்பட்டு பல துறைகள் உருவாகிவிட்டது.

அந்த முக்கியமான பெரும் துறைகள் பின் வருமாறு,
கட்டுமான பொறியியல் (construction Engineering)
கட்டமைப்பு பொறியியல் (Structural Engineering)
சுற்றுச்சூழல் பொறியியல் (Environmental Engineering)
நிலதொழில்நுட்ப பொறியியல் அல்லது புவிதொழில்நுட்ப பொறியியல் (geotechnical engineering)
மூலபொருள் பொறியியல் (Materials Engineering)
அளக்கையியல் (Surveying)
போக்குவரத்துப் பொறியியல் (Transportation Engineering)
நகர்ப்புற திட்டமிடல் (Urban Planning)
நீர் வளம்  (ஆதார) பொறியியல் (Water Resource Engineering)
கடற்கரை பொறியியல் (Coastal engineering)
தடயவியல் பொறியியல் (Forensic Engineering) +
நிலநடுக்க ( நிலஅதிர்ச்சி /நிலஅதிர்வு) பொறியியல் (Earthquake Engineering) +
சுரங்கவியல்  (சுரங்கப்பணி / சுரங்க) மற்றும் குடைவு  பொறியியல் (Minning and Tunnelling Engineering) +
பெருங்கடல் (மாக்கடல்) பொறியியல் (Ocean Engineering) +
ஊரகத் திட்டமிடல் (கிராமப்புற திட்டமிடல் / நாட்டுப்புற திட்டமிடல்) (Rural planning)
காற்று (வளி) பொறியியல் (Wind Engineering)+
பாரம்பரிய (பழமை/மரபுச்சின்னம்) பாதுகாப்பு பொறியியல் (heritage conservation engineering) +

குறிப்பு: + இந்த துறைகள் கடந்த 50 ஆண்டுக்குள் புதிய உரு பெற்றவைகள்.
நேரடி கட்டிட பொறியியல் துறையின் கீழ் இல்லாமல் தனித்து இருந்தாலும் அந்த துறை சார்ந்த சில துறைகள் ஒன்றோடு ஒன்று பிரிக்க முடியா வண்ணம் பிணைத்து இருக்கிறது. அவற்றை கீழே பார்க்கவும்.
கட்டிடக்கலை (architecture), பேரிடர் மேலாண்மை (Disaster Management),
புவிப்பொதியியல் (Geology), வேளாண் பொறியியல் (Agricultural Engineering)
பெட்ரோலிய (சிலா தைல) பொறியியல் (Petroleum engineering)

மேலே குறிப்பிட்ட ஒவ்வொரு துறையின் செயல்பாடு, துணைபிரிவு மற்றும் பணிகள் பற்றி இனி பார்ப்போம்.

கட்டுமான பொறியியல் (construction Engineering)
இந்த துறையே பெரும்பாலும் அனைவரும் அறிந்த கட்டுமான துறை. இந்த துறை சார்ந்தவர்களே ஒரு கட்டுமானம் மேலே கூறிய அனைத்து துறையினரின் உழைப்பு, கனவு மற்றும் கற்பனை படைப்பை எதார்த்தமான உலகத்தில் வரிவடிவம் கொடுப்பவர்கள். இவர்களின் உழைப்பு அசாத்தியமானது. அனைத்து கட்டிட துறை வல்லுனர்களையும் (எ.கா: கட்டிட கலை, கட்டமைப்பு, அளக்கையியல், நிலதொழில்நுட்ப பொறியாளர்), தொழிலாளர்கள் (எ.கா: மேஸ்தரி, கம்பிக்கட்டுவோர், தச்சர், மின்சார நிபுணர்), ஒப்பந்ததாரர்கள், உரிமையாளர் (client) மற்றும் வாடிக்கையாளர்கள் (customer) என அனைவரையும் ஒரு புள்ளியில் இணைப்பவர்கள் இவர்களே.

இவர்களது பணிகள்,
கடல் கட்டமைப்புகள், பாலங்கள், கட்டிடங்கள், சுரங்கங்கள், நெடுஞ்சாலைகள், போக்குவரத்து அமைப்புகள், அணைகள், விமான நிலையங்கள், துறைமுகங்கள், நீர் வழங்கும் அமைப்பு மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலைகள் என எல்லாவகையான கட்டுமானத்தையும் மெய்வடிவம் கொடுப்பவர்கள்.

கட்டுமான திட்டமிடல் மற்றும் காலவரையீடு செய்தல் (Construction planning and scheduling), விலை மதிப்பிடல் மற்றும் மதிப்பீடு (estimation costing and valuation), கட்டுமான பொருளாதாரம் மற்றும் நிதி (construction economic and finance), ஒப்பந்தம் கோருதல் மற்றும் கோரிக்கை உரிமை (construction contracts and claims), கட்டுமான மேலாண்மை (Construction management), கட்டுமானம் செய்வது (construct), கட்டுமான மேற்பார்வையிடுவது (supervise), பொருள் தரக்கட்டுப்பாடு (quality control), பின்னர் பராமரித்தல் (maintenance) என தொடக்கம் முதல் முடியும் வரையுள்ள அனைத்து பணியையும் செய்வது இவர்களே.

நான் மேலே குறிப்பிட்டது போன்று ஒவ்வொரு பணியும் செய்ய பெரு நிறுவனங்களில்

ஒவ்வொரு துறைக்கும் பொறியாளர், மூத்த பொறியாளர் (senior engineer), மேலாளர் (manager), மூத்த மேலாளர், துணை பொது மேலாளர், பொது மேலாளர், துணை தலைவர் (vice president / chairman), தலைவர் என பலர் இருப்பார். சிறு குறு நிறுவனங்களில் ஒரு சிலரே அனைத்து துறையும் கவனிக்கும் வண்ணம் இருக்கும்.

கிளை துறைகள்:
கட்டுமான பொருள்கள் அடிப்படையில் பிரிவுகள்,
அலுமினியம் கட்டுமானம் (aluminum construction), கற்காரை கட்டுமானம் (Concrete construction) அல்லது வலுப்படுத்தப்பட்ட (வலிவூட்டிய) கற்காரை கட்டுமானம் (reinforced concrete construction), கற்காரை சாரம் கட்டுமானம் (construction of concrete formworks), விலை விளைவுறு (பயனுறு) கட்டுமானம் (Cost effective construction), கூட்டு கட்டுமானம் (composite construction), கற்கட்டுமானம் (masonry construction), முன்கட்டமைப்பு கட்டுமானம் (prefabricated construction), பிந்தை இழுவிசை கற்காரை கட்டுமானம் (Post tensioned concrete construction), முன்தகைவுக் கற்காரை கட்டுமானம் (pre&stressed concrete construction), கட்டமைப்பு எஃகு கட்டுமானம் (structural steel construction), மரகட்டுமானம் (Timber construction), பசுமை கட்டுமானம் (Green Building construction)

வடிவமைப்பு அடிப்படையில் பிரிவுகள்,
வடிவமைப்பு முறை பழங்கால கட்டுமானத்தில் கையாண்டதும் அதுவே நவீன காலத்தில் கையாண்டதையும் சில புகைப்படங்கள் வாயிலாக விளக்க முயல்கிறேன். 1000 பக்கம் கட்டுரை ஒரு கருத்தை விளக்குவதைக் காட்டிலும் ஒரு படம் எளிதில் விளக்கவல்லது என்பது என் எண்ணம். படங்கள் இணையம் மூலம் பெற்றது. இதை எடுத்தவருக்கு என் நன்றி.

கமான் (வளைவு) கட்டுமானம் (Arch construction)





குவிமாடம் கட்டுமானம் (dome construction)




கட்டமைக்கப்பட்ட கட்டமைப்பு கட்டுமானம் (Framed Structures construction)




தூலக்கட்டு கட்டுமானம் (Truss construction)




கவிகை மாடம் (கவிந்த கூரை) கட்டுமானம் (vault construction)




எறிகணை கட்டுமானம் (கூடு) (shell construction)




வடம் கட்டமைப்பு கட்டுமானம் (cable structures construction)




மென்படல அல்லது கூடார கட்டுமானம் (membrane or Tent construction)



<u>பயன்பாடு அடிப்படையில் பிரிவுகள்,</u>
வேளாண்மைக்குரிய  கட்டுமானம் (Agricultural construction)
பண்ணைமனைக் கட்டுமானம் (farm House), கால்நடை பண்ணை (cattle ranching), தானியச் சேமிப்பு கிடங்கு, தீவனப் பதனகுழிகள், பண்ணை சாலைகள், பண்ணைவேலிகள், பாசன கட்டமைப்புகள், வடிகால் கட்டமைப்புகள், மண்வளப் பாதுக்கப்புக் கட்டமைப்புகள், வாரி அரிப்புத்  தடைக் கட்டமைப்புகள் என வேளாண் தேவையான அனைத்து கட்டமைப்புகளும் இதில் அடங்கும்.
குடியிருப்புக்குரிய கட்டுமானம் (Residential construction)
நாம் வசிக்கும் வீட்டில் தொடங்கி, அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம், விடுதிகள், நகரமைப்பு வீடுகள், வில்லா வீடுகள், சொகுசு பங்களாக்கள், என அனைத்தும் இதில் அடங்கும். பொதுவாக கட்டட பொறியியல் என்றால் நம் நினைவுக்கு வருவது இது மட்டுமே, நான் கூறும் இதர துறைகள் பெரும்பாலும் அறிந்ததில்லை.
வர்த்தக அல்லது வணிகத்துக்குரிய கட்டுமானம் (commercial construction)
வணிகத்துக்குரிய அனைத்து கட்டுமானமும் இதில் அடங்கும். பொட்டி கடை துவங்கி, வணிக வளாகங்கள் (malls), கிடங்குகள், திரைஅரங்குகள், பந்தய மைதானங்கள், வங்கிகள், அலுவகங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப பூங்கா.
சுகாதாரத்துக்கு தேவையான கட்டுமானம் (Healthcare related construction)
சுகாதார மையங்கள், மருத்துவமனைகள் இந்த துறைக்குள் அடங்கும்.
நிறுவனத்துக்குரிய கட்டுமானம் (Institutional construction)
பள்ளி, கல்லூரிகள், பல்கலைகழகம், ஆராய்ச்சி கூடம்/மையம், நூலகம், அருங்காட்சியகம் மற்றும் அனைத்து விதமான கல்வி சார்ந்த துறை கட்டுமானம் இதில் அடங்கும்.
சமயச்சார்பான கட்டிட கட்டுமானம் (Religious building construction)
கோவில்கள், மசூதிகள், தேவாலயங்கள் மற்றும் அனைத்து சமயம் அல்லது ஆன்மீகம் சார்த்த கட்டுமானங்கள் இதில் அடங்கும்.
அரசாங்க கட்டிட கட்டுமானம் (Government building construction)
சட்டமன்றம், அரசாங்க அலுவலகங்கள், கருவுலங்கள், காவல்துறை அலுவலகங்கள், தீயணைப்புதுறை அலுவலகங்கள், நீதிமன்றம் என அரசாங்கம் சார்ந்த கட்டுமானங்கள் அனைத்தும் இதில் அடங்கும்.
தொழில்துறைக்குரிய கட்டுமானம் (industrial construction)

இரசாயன மற்றும் மின் உற்பத்தி நிலையங்கள், எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம், உற்பத்தி நிலையங்கள், குழாய்கள் மற்றும் குழாய்வழி அமைத்தல், ஆலைகள் (அரிசி, சர்க்கரை) என அனைத்தும் இதில் அடங்கும்.
கனரக கட்டுமானம் (Heavy construction)
அணை கட்டுதல், துறைமுகம் கட்டுதல், விமான நிலையம், சுரங்கம் என அனைத்து கனரக வேலைகளும் இதில் அடங்கும்.
உட்கட்டமைப்பு கட்டுமானம் (infrastructure construction)
ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து கட்டுமானமும் இதில் அடங்கும். முன்பு கனரக கட்டுமானம பிரிவுகளில் ஒன்றாக இருந்து பிரிந்த ஒரு துறையாகும். சாலைகள், பாலங்கள், ரயில் பாதை அமைத்தல், பேரிடர் கால ராணுவ கட்டமைப்பு வரை இதில் வரும்.

சுற்றுச்சூழல் கட்டுமானங்கள் (Environment Construction)
இந்த துறையும் முன்பு கனரக கட்டுமானம பிரிவுகளில் ஒன்றாக இருந்து பிரிந்த ஒரு துறையாகும். சுற்றுசுழலை மேன்படுத்தும் அனைத்துக் கட்டுமானமும் இதில் அடங்கும். நீர் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், நீர் மற்றும் கழிவு நீர் மேலாண்மை கால்வாய், தொட்டி, குழாய்கள், குளம், குட்டை, ஏரிகள், மழை நீர் தொட்டி மற்றும் கால்வாய், தொட்டி, குழாய்கள், திட கழிவு மேலாண்மை காற்று மாசுக்கட்டுப்பாடு நிலையம்
.
<u>கட்டிட உயர அடிப்படையில் பிரிவுகள்,</u>
உயரம் குறைவான கட்டிட கட்டுமானம் (Low rise building construction)
15 மீட்டர் (50அடி) முதல் 25 மீட்டர் (80அடி) கீழ் இருக்கும் அனைத்து கட்டிட கட்டுமானமும் இதில் அடங்கும்.
நடுத்தர உயரம் கட்டிட கட்டுமானம் (medium rise building construction)
25 மீட்டர் (80அடி) முதல் 50 மீட்டர் (165அடி) கீழ் இருக்கும் அனைத்து கட்டிட கட்டுமானமும் இதில் அடங்கும்.
உயர்ந்த கட்டிட கட்டுமானம் (Tall building construction)
50 மீட்டர் (165அடி) முதல் 250 மீட்டர் (820அடி) கீழ் இருக்கும் அனைத்து கட்டிட கட்டுமானமும் இதில் அடங்கும்.
மிக உயரமான கட்டிட கட்டுமானம் (Super Tall building construction)
250 மீட்டர் (820அடி) முதல் 600 மீட்டர் (1965அடி) கீழ் இருக்கும் அனைத்து கட்டிட கட்டுமானமும் இதில் அடங்கும்.
மெகா உயரமான கட்டிட கட்டுமானம் (Mega Tall building construction)

600 மீட்டர் (1965அடி) மேல் இருக்கும் அனைத்து கட்டிட கட்டுமானமும் இதில் அடங்கும். Council on Tall Buildings and Urban Habitat (CTBUH) என்னும் சர்வதேச அமைப்பின் வரைவுரை அடிப்படையில் வகுக்கப்பட்டுள்ளது

இப்படியாக பல கிளை துறைகளை உள்ளடக்கியது இந்த துறை. நாம் பார்த்த இந்த முதல் துறையான கட்டுமான துறையிலேயே இத்துணை பிரிவுகள். எனது அடுத்துவரும் கட்டுரைகளில் நான் முதலில் பட்டியலிட்ட பிற துறைகளின் செயல்பாடு, பணி மற்றும் உட்பிரிவு பற்றி விவரமாக பார்க்கலாம்.

- மன்னை பாலாஜி பிரசாத் ( தொடரும் )

---

# இளைஞன் அல்ல இறைவன்....



மணிபாரதி தங்க சுந்தர்

என்ன தெரியும் எம்மினத்தின் இளைஞர்கள்
பற்றி...!

ஒரு நிமிடம் திரும்பி பார், உன்
நிலங்களைச் சுற்றி...!

இளைஞர் பட்டாளம் மட்டும்
இல்லையெனில் இன்று
காவிரிப்படுகையே காணாமல்
போயிருக்கும்...!

உன் துயரத்தில் பங்கெடுத்தது நீ வேண்டி
விரும்பி அழைத்த இறைவன் அல்ல-நீ
வெறுத்து ஒதுக்கிய இளைஞன்...!

எவனை கைப்பேசியாலேயே வீணாக
போகிறான் என்றாயோ அதோ
கைப்பேசியால் பொருட்களை சேகரித்து
தானாக முன்வந்து உதவினான்...!

எவனை வேலை வெட்டி இல்லாதவன்
என்றாயோ அவன் தான் உனக்கு மூன்று
வேளை உணவளித்தான்...!

எவனை தாய்,தந்தை பேச்சை கேட்க
மாட்டான் என்றாயோ அவன் தான் தாய்
நிலத்திற்காக பிச்சை கேட்டான்..!

எவனை ஆணவமாக சுற்றி திரிபவன்
என்றாயோ அவன் தான் தமிழக
ராணுவமாய் உன் நிலத்தை
மீட்டெடுத்தா
ன்...!

எவனை
இயலாதவன்
என
ஒதுக்கினாயே
ா அவன் தான்
இயல்பு நிலை
திரும்ப
இரவுகளையும்
விடியலாக்கி
இயங்கினான்...!

எவனைத் தன்பணியை மட்டும் பார்க்கும்
சுயநலவாதி என்றாயோ அவன் தான்
தன்னலமற்று களப்பணி செய்தான்....!

எவனைப் பெண்ணை நேசித்து வீணாக
போகிறேன் என்றாயோ அவன் தான்
மண்ணை நேசித்து உயிர் கொடுத்தான்...!

நீயோ தகுதியற்ற ஆட்சியாளனுக்கு
வாக்களித்து ஐந்தாண்டுகள்
அடிமையானாய்...!

ஒவ்வொரு ஆண்டும் இளைஞன் தான்
உனக்கு ஆறுதலாகிறான்...!

ஒவ்வொரு நாளும் உன் கண்ணீரைத்
துடைத்து புதிய காவிரிப்படுகையை
படைத்தான்....!

அதனால் தான் சொல்கிறேன்...
அவன் இளைஞன் அல்ல இறைவன்

# யாவரையும் போல்

“வீட்ல நம்ம லவ்வ பத்தி பேசிட்டேன்னு சொன்னல்ல ராஜ்..என்ன சொன்னாங்கனு கேட்டதுக்கு நேர்ல வா பேசிக்கலாம்னு சொன்ன.. வந்து அர மணி நேரம் ஆச்சு.. என்னனு சொல்லு...” படபடப்பும் இவ்வளவு நேரம் அமைதியைக் கடைப்பிடிக்கும் தன் காதலனின் செயலால் சிறிது கடுப்பாகவும் யுவராஜிடம் கேட்டாள் ரதி..

மறுபடியும் அவன் அமைதியையே கடைப்படிக்க சற்று கோபமுடன் “பை” என சொல்லி எழுந்தாள் ரதி..

“நம்ம கல்யாணம் நடக்காது ரதி”, துல்லியமாய் விழுந்த வார்த்தைகளின் வலியில் துவண்டு போய் இருக்கையில் அமர்ந்தாள் ரதி..

“ என்ன சொன்ன ராஜ்? திருப்பி சொல்லு.. உறுதி செய்து கொள்வதற்காய் மறுபடியும் கேட்டாள் ரதி..

ஆமா ரதி.. நம்ம கல்யாணம் நடக்காது.. வீட்ல எவ்வளவோ பேசி பாத்தேன்.. கன்வின்ஸ் பண்ண முடியல.. சாரி ரதி..

அதிர்ச்சியிலிருந்து மீள முடியாமல் ராஜைப் பார்த்துக் கொண்டிருந்த ரதி, இதான் உன் முடிவா ராஜ்? நல்லா யோசிச்சு பாத்து தான் சொல்றியா“? என கேட்டாள்..

ஆமா ரதி.. நான் யோசிச்சு பாத்து தான் சொல்றேன்.. வீட்ட எதிர்த்து என்னால எதுவும் பண்ண முடியாது.. தங்கச்சிக்கு இப்ப தான் கல்யாணம் முடிஞ்சிருக்கு.. நான் உன்ன கட்டிக்கிட்டா, அவ புகுந்த வீட்ல எப்படி இருக்கும்னு தெரியாது... அதுவுமில்லாம எனக்கு பெர்மனன்ட் ஜாபுமில்ல.. நீயும் ஒரு பிரைவேட் ஸ்கூல்ல தான ஒர்க் பண்ற.. வீட்ட எதிர்த்துகிட்டு வந்தா கூட நம்ம ஸ்டெடி
ஆக வருஷக்கணக்கு கூட ஆகும்..இதையெல்லாம் தாண்டி சொசைட்டில நம்ம பேரன்சோட பேர் கெட்டுப் போயிடும்.. நமக்கும் எவ்ளோ சப்போர்ட் இருக்கும்னு தெரியாது.. அதனால் வேணாம் ரதி... நம்ம பிரேக் அப் பண்ணிக்கலாம்.. “ஒரே மூச்சாய் பேசி முடித்து ரதியாய் நோக்கினான் ராஜ்..
தான் கூறியதைக் கேட்டதும்... ஏன், எதற்கு, ஆ..ஊ என அவள் குதிப்பாள் என தான் எண்ணியதற்கு மாறாய் அவள் மௌனமாய் இருப்பதை கண்டு அவளை நோக்கினான் ராஜ்..

“எதனால உங்க வீட்ல என்ன வேண்டாம்னு சொல்றாங்க ராஜ்?”, எந்த சலனமும் இன்றி கேட்டாள் ரதி..

அது ரதி.. அது வந்து..

“பரவால்ல எதுவா இருந்தாலும் சொல்லு ராஜ்”..

“உன்னோட கேஸ்ட் தான் ரதி,” தலையை தாழ்த்தியவாறு கூறினான் ராஜ்..

சற்று தடுமாறி நிதானத்திற்கு வர முயற்சித்தாள் ரதி..

‘‘அவங்க சொல்றதுலயும் ஒரு நியாயம் இருக்குனு நினைக்கிறேன் ரதி.. என்னால எங்க வீட்ட எதிர்த்து எதுவும் பண்ண முடியாது ரதி..பிளீஸ் ட்ரை டு அண்டர்ஸ்டாண்ட் மை சிட்சுவேஷன்.. நீ புரிஞ்சுப்பனு நினைக்கிறேன் ரதி..’’

‘‘உன்னோட நல்லதையும் நினச்சு தான் வேண்டாம்னு சொல்றேன்.. எப்படியும் வீட்ல கன்வின்ஸ் பண்ணிடலாம்னு தான் நினச்சுட்டு இருந்தேன்..ஆனா இப்படி ஆகும்னு நான் எதிர்ப்பாக்கல.. யாரோட சப்போர்ட்டுமில்லாம நாம வாழ்றது ரொம்ப கஷ்டம் ரதி.. அதுவும் உனக்கு தான் ரொம்ப சிரமமா இருக்கும்.. அதையும் யோசிச்சு தான் சொல்றேன்.. ரதி.. ஏதாவது பேசு,‘‘ ரதியிடமிருந்து எந்த சலனமும் இல்லாமலிருப்பதைக் கண்டு தானே அவளைப் பேச சொல்லி கேட்டான் ராஜ்..

‘‘ஏன் ராஜ்?கேஸ்ட் ப்ராப்ளம்னு உனக்கு என்ன லவ் பண்ண ஆரம்பிக்கும்போது தெரியலயா? இல்ல கல்யாணம், கம்மிட்மன்ட்னு வரப்போ ரெண்டு பேர்ல யாருமே இன்னும் ஃபினான்ஷியலா ஸ்டடி ஆகலனு எஸ்கேப் ஆக ட்ரைப் பண்றியா ராஜ்?

‘‘கோவத்துல இருக்கேன்றதுக்காக நீ என்ன பேசுனாலும் கேட்டுப்பேன்னு நினைக்காத ரதி.. கொஞ்சம் யோசிச்சு பேசு ரதி..’’

‘‘அதான் எதுவுமில்லனு சொல்லிட்டியே ராஜ்.. நீ சொன்னத கேட்டு நான் ஹர்ட் ஆவேன்னு நீ யோசிக்காம முடிவையே எடுத்துட்டு வந்து பேசும்போது, நான் கொஞ்சம் பேசக் கூடாதா ராஜ்?’’

‘‘ரதி, கொஞ்சம் யோசிச்சு பாத்தினா உனக்கே நான் எடுத்த முடிவு சரின்னு புரியும்’’

‘‘இத நீ என்ன லவ் பண்ண ஆரம்பிக்கும்போது யோசிச்சிருந்தா சரி ராஜ்.. அப்போலாம் எது கரெக்ட், எது தப்புனு தெரியாத வயசா என்ன ராஜ்? அப்போ உனக்கு என்னோட ஜாதி, என்னோட வருமானம், என்னோட நெலம எதையுமே தெரியாதா ராஜ்? நாம லவ் பண்ண ஆரம்பிக்குறப்போ எனக்கு சேலரி வெறும் 5000 தான்.. நீ அப்போ தான் வேல தேடிட்டிருந்த.. அப்போ உன்னால நாம வாழப் போற வாழ்க்கைக்கு ஏத்த வருமானம் இல்லனு உன்னால கேல்குலேட் பண்ண முடியாத வயசா?? உனக்கு தங்கச்சி இருக்கானு மறந்துட்டியா?? இல்ல உங்க வீட்லயும் ஜாதிப் பெருமைப் பேசுவாங்கனு தெரியாம இருந்தியா?? இல்லல... எதிர்காலத்துல என்னோட நல்லத நீ யோசிக்கிறியா ராஜ்?? இப்ப என்னோட மனச உடச்சிட்டியே அது உனக்கு தெரியலயா?? சரி ராஜ்.. நீ சொல்ற மாதிரியே வருவோம்.. இதுவே நான் உன்னோட எடத்துல இருந்து உன்ன கல்யாணம் பண்ணிக்க முடியாதுனு சொன்னா நீ ஒத்துப்பியா ராஜ்??அது சரி.. என்னதான் இல்லனு சொன்னாலும் உன்ன மாதிரியும், உங்க வீட்ல உள்ளவங்க

மாதிரியும் ஒன்னுத்துக்கும் உபயோகமில்லாதத தலையில தூக்கி வச்சுட்டு ஆடுறவங்க இருக்க தான செய்றீங்க!!... என்ன பண்றது?? கௌரவ கொலை, ஆணவக் கொலைனு பேப்பர்லயும் நியூஸ்லயும் பாத்திருப்ப...பாத்து பயந்திருக்க போல ராஜ்..உண்ம தான்..ஆனா அதுக்காகவும், உன் குடும்பத்தோட ஜாதி பெருமைக்காகவும் என்னோட மனச உடைக்கிறியே உனக்கு நான் பேசுறது தப்பா தெரியுதா ராஜ்??, என கோபமுடன் கேட்க வேண்டியதைக் கேட்காமலேயே ஆழ்ந்த மூச்சை எடுத்து கொண்டு தன்னை சமாதானப் படுத்திக் கொண்டு ''அவ்ளோதான ராஜ்.. நீ சொல்ல வந்தத சொல்லி முடிச்சுட்டேன்னா நா கிளம்புறேன்.. டியூஷனுக்கு டைம் ஆச்சு..'', என்றபடி கிளம்ப ஆயத்தமானாள்.

ரதி... எதாவது சொல்லிட்டு போ..

''இனி என்ன சொல்லனும் ராஜ்? என்கிட்ட கேட்டா இந்த முடிவுக்கு வந்த? நீ ஒரு முடிவு எடுத்துட்டு வந்து தான என்கிட்ட சொல்லிட்டிருக்க.. சோ ஐ டோன்ட் ஹேவ் அ சாய்ஸ் ராஜ்.. நாம கிளம்பலாம்.. இதுக்குமேல பேச எதுவுமில்லனு நினைக்கிறேன்.. பை ராஜ்.. லவ்...''என தொடங்கிய தன் பேச்சை நிறுத்திக் கொண்டு வேகமாய் கிளம்பினாள் ரதி..

படபடப்பும், துடிப்புமாய் இருக்கும் ரதி, என்றுமேயில்லாத அளவிற்கு இன்று மௌனமாய் செல்வதை ஏற்றுக் கொள்ள மனமில்லாமல் தன் வண்டியை கிளப்ப ஆயத்தமாகிக் கொண்டிருக்கும்போது, ''அந்த சாதி மக்க நம்ம ஊரு பக்கமே வரக்கூடாதுடா.. அதுக்கு என்ன பண்ணனுமோ பண்ணு.. நமக்குனு ஒரு பேரு இருக்குடா.. நியாபகம் வச்சுக்க.. பேரு முக்கியம்டா.. செத்தாலும் கௌரவமா சாவனும்டா,'' எனக் கைப்பேசியில் யாருடனோ பேசியவாறே சென்ற ஒருவனையும் அவன் கூறிய வார்த்தைகளையும் கேட்டவாறே, வண்டியைக் கிளப்பினான் ராஜ்.

ராஜ் கூறியவற்றைக் கேட்டு அவனிடம் தன் கோபத்தைக் காட்ட முடியாமலிருந்ததையும் தன் காதல் அத்தியாயம் இப்படி பாதியிலே எவ்வித முடிவின்றி நின்றுப் போனதற்கான காரணத்தையும் எண்ணி தான் டியூஷன் எடுக்கும் சென்டருக்குள் நுழையும் போது, ''சாதிகள் இல்லையடி பாப்பா'' எனும் வாசகத்துடன் முண்டாசு கவிஞரின் ஓவியம் தன்னை எள்ளி நகையாடி வரவேற்பதாய் எண்ணி வெளி வரத் துடிக்கும் கண்ணீரை அடக்கி தான் அன்று எடுக்க போகும் பாடத்தை பற்றிய குறிப்புகளை நோக்கினாள் ரதி..



- கனிமொழி

# 1977 புயலும் 2018 புயலும்

கஜா வராண்டா என்று கேலி செய்துவிட்டு, மீம்ஸ் போட்டுவிட்டு உறங்கிய நம்மை விடியற்காலையில் நடுநடுங்க வைத்துவிட்டது கஜா. இலட்சக்கணக்கான மரங்களையும், நாம் வாழும் வீடுகளையும் நாசமாக்கியது கஜா புயல். காவிரிப்படுகை மாவட்டத்து மக்களால் என்றுமே மறக்க முடியாத புயலாக 2018 கஜா புயல் அமைந்துப் போனது.

இதில் என்ன வெட்கக்கேடு என்றால், உலகிற்கே சோறு போடும் காவிரிப்படுகை மாவட்டம் சோற்றுக்கு கை ஏந்தி நிற்கிறது. காவிரிப்படுகை மாவட்ட கிராமங்களின் மக்கள், உண்ண சோறு இல்லாமல் நின்றார்கள் என்பது எவ்வளவு பெரிய அசிங்கம்!

ஏன் சோறு இல்லாமல் போனது? அரிசி விளைவிக்கும் நம்மிடம் அரிசி இல்லையா?

1977 ல் இதேபோல் கஜா புயலுக்கு இணையான ஒரு புயலை இதே காவிரிப்படுகை சந்தித்தது. இதே போல் பல குடிசைகள் விழுந்தது, மரங்கள் விழுந்தன. ஆனால் யாருக்கும் சோறு இல்லாத நிலை ஏற்படவில்லை. காரணம் எல்லோர் வீட்டிலும் பரண் என்று சொல்லப்படும் பத்தாயம் இருந்தது. அதில் 200 மூட்டை நெல் சேமிப்பில் இருந்தது.

தற்போது அந்த பத்தாயம் எங்கே போனது? அரிசியை இருப்பில் வைத்திருக்கும் பழக்கம் எங்கே போனது?

1977 ல் அரிசியை இருப்பில் வைத்திருந்த நாம் யாருமே 2018 ல் அரிசியை இருப்பில் வைத்துக்கொள்ளவில்லை. அரிசி தேவைப்பட்டால் அருகில் இருக்கும் கடைக்குச் சென்று தற்போதைய தேவைக்கு மட்டும் அரிசி வாங்கிக்கொள்கிறோம். 2 கிலோ அல்லது 5 கிலோ அல்லது அதிகபட்சம் 10 கிலோ அரிசியை மட்டுமே வாங்கிப் பயன்படுத்தும் பழக்கம் நம்மிடம் நடைமுறையாகிப் போனது.

விவசாயம் செய்யும் யாரும் தற்போது விவசாயியாக இல்லை. நுகர்வோராக தான் இருக்கிறோம். ஒரு பேரிடர் வந்து தவிக்கும்போது நுகர்வுக்கு பணம் இருக்கிறது, நுகரும் வாய்ப்பு தான் இல்லை. இருப்புவைத்துக்கொள்வது என்பது தமிழனின் வாழ்வியல். விவசாயம் செய்யும் நம்மிடமே (காவிரிப்படுகையில்) அரிசி சேமிப்பில் இல்லையென்றால் வெட்கி தலை குனிய வேண்டி இருக்கிறது அல்லவா?

சோற்றுக்கு அடுத்தபடியாக புயலில் பாதிக்கப்பட்டோரின் முக்கிய தேவையாக மெழுகுவர்த்தி தான் இருந்தது. வெளிச்சம் இன்றி தவித்துப்போனார்கள் காவிரிப்படுகை மக்கள். ஆனால் 1977 ல் யாரும் இருட்டில் தவிக்கவில்லை. காரணம் அப்போது எல்லோரிடமும் மண்ணெண்ணெய் சேமிப்பில் இருந்தது. 2018 ல் தொலைக்காட்சி, குளிர்சாதனப்பெட்டி போல 1977 ல் விளக்கு என்பது எல்லோர் வீட்டிலும் இருந்தது. சேமிப்பில் இருந்த மண்ணெண்ணையை பயன்படுத்தி விளக்கு ஏற்றி வெளிச்சத்தில் வாழ்ந்தனர்.

புயலின் ஆக்ரோசம் யாரோ ஒருவர் வீட்டை முழுசாக சேதப்படுத்தி சேமிப்பில் இருந்த அத்தியாவசிய பொருட்கள் சேதம் அடைந்தாலும் மற்றவர்கள் வீட்டில் போதும் போதும் என்னும் அளவுக்கு இருப்பு இருந்தது. கொடுத்து உதவினார்கள். 2018 புயலை போல் வெளியூர்களில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் தேடிப்போய் உதவ வேண்டிய அவசியம் இல்லாமல் இருந்தது. காரணம் அன்று உதவும் மனம் இருந்தது. இன்று நிவாரண பொருட்களை கூட சண்டை போட்டு தனக்கு மட்டும் பெற்றுக்கொள்ளும் சுய நலம் தான் உள்ளது.

நான் காவிரிப்படுகை மாவட்டத்தில் களத்தில் இறங்கி நிவாரணப் பணியில் ஈடுபட்டவன். என்னிடம் உணவு வேண்டி எவ்வளவு கை தூக்கிய கும்பிடுகள்! அதை எல்லாம் என்னால் சீரணிக்க முடியவில்லை. அரிசியை உற்பத்தி செய்பவன் உணவுக்கு கை ஏந்துவது அழிவின் தொடக்கம் அல்லவா? 1977 ல் கை ஏந்தாத காவிரிப்படுகை 2018 ல் கை ஏந்தி நிற்கிறது. தமிழனின் மிக பெரிய பலமே வாழ்வியல் முறை தான். அதை விட்டு வெளியேற வெளியேற சிறு புயல்கள் கூட பெரும் இன்னல்களை தரும். நுகர்வு கலாச்சாரத்தை அடிப்படையாக வைத்து வாழ்வதை தவிர்த்திடுவோம். தவிர்க்காவிடில் தகர்த்தெறியப்படுவோம்.

--
**நிரஞ்சன்**

---

# கஜாவும் மாற்றங்களும்...

மாற்றம் ஒன்றே மாறாதது என்னும் வார்த்தைக்கு ஏற்ப மனித மனங்களில் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது கஜா. எண்ணிலடங்கா கோரங்கள் மனிதர்களுக்கு மட்டுமா? பசுவை தொலைத்த கன்றுகள், கன்றை தொலைத்த பசுக்கள், நடுங்கி திரிந்த ஆடுகள்.

வீடுகளை இழந்து அடுத்த வேளை உணவுக்காக ஏங்கும் மனிதர்கள். களவும் கற்று மற என்பார்கள் கள்வர்கள் கூட தங்கள் களவை மறந்துவிட்டார்கள். பல சேவை கரங்களும் நமக்கு கைகொடுத்து நமது தேவைகளை நிறைவு செய்தது. ஆடி காற்றால் அம்மி நகரும் என்பார்கள் இன்று கஜாவால் நம் வீட்டு அம்மிகள் நகர்ந்தது. மின்சாரம் தொலைத்தொடர்புகள் இல்லாமல் வாழ முடியுமா என்று நினைத்த நாம்தான் இன்று அவ்வாழ்க்கையை வாழ்கிறோம். இதுபோல் பல மாற்றங்களை நம் மனதில் ஏற்படுத்தியுள்ளது கஜா.

--
**தர்ஷினி நாகூரான்**

# மழை எப்படி உருவாகிறது..?

ஆவியாதல்:

நீர்நிலைகளில் உள்ள நீர் ஆவியாக நீர் 100 டிகிரி வெப்பத்திற்கு சூடுப்படுத்த வேண்டும். அப்படி எந்த நீர்நிலையும் கொதிக்கும்படி சூடாவதில்லை. சூரிய வெப்பத்தால் ஆவியாதல் நீர்நிலைகளின் மேற்பரப்புகளில் மட்டுமே நடக்கிறது.

எப்படி என்றால், ஒரு சட்டியில் ஒரு லிட்டர் நீரை ஊற்றி அதனை அடுப்பில் வைத்து சூடேற்றி அது கொதிநிலையை அடைய சுமார் பத்திலிருந்து இருபது நிமிடம் ஆகும். பின்னர் அந்த நீர் முழுவதும் ஆவியாகி மறைய ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆகும்.

ஆனால் உணவகங்களில் உள்ளது போன்ற அகலமான பெரிய சூடான தோசைக்கல்லில் அதே அளவு நீரை தெளித்தால் சில நொடிகளில் ஆவியாகி காணாமல் போகும்.

இதே நிலைதான் ஆறு குளம் போன்ற நீர்த்தேக்கங்களில் நடைபெறுகிறது.

நமக்கெல்லாம் தெரியும் காற்றில் அதிக அளவாக 78% நைட்ரஜன், 20% ஆக்சிஜன், 0.5% கார்பன் டை ஆக்ஸைடு, இதர வாயுக்கள் நீராவி எல்லாம் சேர்ந்து 1.5% ஆகியன கலந்திருக்கும்.

இவை ஒவ்வொன்றும் சூரியனின் கதிர்கள் பட்டவுடன் வெவ்வேறு அளவில் சூடாகும். இவற்றில் கார்பன் டை ஆக்ஸைடு மட்டும் மிகவும் சூரிய வெப்ப உணர்வுடையது. மிகக்குறைந்த சூரிய ஒளி பட்டாலே கடுமையாக வெப்பமடையும்.

உண்மையில் சூரியனில் உருவாகும் வெப்பம் இங்கே வருவதே இல்லை. சூரிய ஒளி கதிர்கள் பட்டவுடன் இந்த கார்பன் டை ஆக்சைடுதான் வெப்பத்தை உருவாக்குகிறது. அதனால்தான் வாகனங்கள் அதிகம் செல்லும் சாலையில், அவற்றிலிருந்து வெளியேறிய புகையால் அங்கு மட்டும் காற்றில் கார்பன் டை ஆக்ஸைடு அதிக அளவில் இருப்பதால் வெயில் நேரத்தில் கடுமையான அனலை நாம் உணர்கிறோம்.

சூரிய ஒளி பட்டவுடன் கார்பன் டை ஆக்ஸைடானது முழு சூட்டில் உள்ள தோசைக்கல் அளவிற்கு சூடாகிவிடும். நம்மை சுற்றி உள்ள காற்றில் அதன் அளவு 0.5% சதவீதம் என்பதால் அவ்வளவு சூட்டை நம்மால் உணர முடிவதில்லை.

இப்போ நீர் ஆவியாக 100 டிகிரி வெப்பம் எங்கிருந்து வருகிறதுன்னு புரிந்துவிட்டதா.. சரி.. வெப்பம் கிடைத்துவிட்டது. ஆனால் மிகப்பெரிய நீர்நிலை கொதிக்காமல்

ஆவியாவது எப்படி..?

ஒரு பெரிய நீர் தேக்கத்தில் உள்ள அவ்வளவு நீரையும் கொதிக்க வைத்து பின்னர் ஆவியாக்குவது என்பது சாத்தியமற்ற ஒன்று. தவிரவும் அந்த நீரை நம்பி அதனுள்ளும் அருகிலும் ஏராளமான உயிர்கள் இருக்கும் போது இயற்கையானது மனிதர்களை போல அவ்வளவு கொடூரமாக தன் அன்றாட பணிகளை செய்யாது.

நீர் பரப்பும் காற்றும் சந்திக்கும் புள்ளியில் கடுமையான சூட்டில் உள்ள கார்பன் டை ஆக்சைடு மூலக்கூறானது ஊசி முனையையும் விட நுண்ணிய அளவு நீர் மூலக்கூறு ஒன்றை மட்டும் சூடாக்கி ஆவியாக்கி விடும். பிறகு வேறொரு சூடாக உள்ள கார்பன் டை ஆக்சைடு மூலக்கூறு இன்னொரு நீர் மூலக்கூறை சூடாக்கி ஆவியாக்கி விடும்.

இந்த ஆவியாதல் நிகழ்வு நீரின் மேற்பரப்பில் காற்றுடன் சந்திக்கும் இடத்தில் மட்டும் நடக்கும். எனவே நீர் சூடாகாது. எந்த மூலக்கூறு காற்றிலிருந்து வெப்பத்தை ஏற்றுக்கொண்டதோ அவை மட்டும் தொடர்ந்து வெளியேறிவிடுவதால் தேங்கியுள்ள நீர் தொடர்ந்து அதே வெப்ப நிலையிலேயே இருக்கும். காற்று இந்த வேலையை வேகமாக செய்தால் நீர் குளிர்ச்சியடையவும் செய்யும்.

தாவரங்கள் உட்பட எல்லா உயிரினங்களும் தங்களுடைய உடல் வெப்பத்தை தன் உடலுக்குள் உள்ள நீரை ஆவியாக்குவதன் மூலம் தன் வெப்ப சமநிலையை பராமரிக்கின்றன. மரத்தடியில் குளிர்ந்த காற்று கிடைக்க காரணம் மரம் ஏராளமான நீர் மூலக்கூறுகளை ஆவியாக்கி காற்றை குளிர்வித்ததுதான்..

இவ்வாறு உருவான நீராவியின் எடை காற்றின் எடையை விட குறைவு என்பதால் வான் நோக்கி புறப்பட்டு சென்றுவிடும்.

சரி காற்றின் வெப்பநிலை சற்று ஏறக்குறைய 30 முதல் 36 டிகிரிக்குள்தானே இருக்கிறது எனில் இது நீரின் கொதிநிலையாகிய 100 டிகிரியை விட குறைவு என்கிற விதத்தில் அது குளிர்ந்து மீண்டும் நீராக ஆகிவிட வேண்டியதுதானே என்கிற கேள்வி நமக்கு வரும்.

ஆற்றல் அழிவின்மை விதி என அறிவியலில் ஒரு கோட்பாடு உண்டு. அதன்படி எந்த ஒரு ஆற்றலையும் ஆக்கவோ அழிக்கவோ முடியாது. ஆனால் அதை ஒன்றிலிருந்து மற்றொன்றாக மாற்ற முடியும்.
அதன்படி நீராவி மீண்டும் நீராக மாற தன்னிடம் உள்ள வெப்ப ஆற்றலை வேறொரு பொருளிடம் இழந்தால்தான் அது மீண்டும் நீராக மாற முடியும். அதற்கு நீராவிக்கு கொஞ்சம் அழுத்தம் தேவைப்படுகிறது. ஆனால் இயல்பான காற்றில் நீராவிக்கு நீராக சுருங்க தேவையான அழுத்தம் கிடைக்காது.

இயல்பான காற்று தன்னில் ஒரு லிட்டர் காற்றில் 0.804கிராம் நீராவிக்கு மேல் தங்க விடாது. காற்றின் அழுத்தம் தன்னை விட எடை குறைவாக உள்ள நீராவியை மேல் நோக்கி விரட்டிக்கொண்டே இருக்கும். எனவே வெப்பம் குறைவாக உள்ள இடத்தில் கூட தன்னுடைய வெப்பத்தை இழக்க முடியாமல் நீராவி மேல் நோக்கி விரைகிறது. இந்த செயல்தான் பூமி பரப்பில் உள்ள எல்லா பொருட்கள் மற்றும் உயிர்கள் அனைத்தும் சீரான வெப்பத்தில் நிலைத்திருக்க உதவுகிறது.

நீராவி மேகமாக மாறும் விதம்:
இனி திபு திபுவென புறப்பட்ட நீராவி எப்படி மேகமாக மாறுகிறது என்பதை பார்ப்போம்.

காற்று மண்டலத்தில் ஒவ்வொரு வாயுவும் அதன் எடைக்கேற்ப அடுக்கடுக்காக உள்ளன. இருப்பதிலேயே கார்பன் டை ஆக்ஸைடு எடை மிக்கது. எனவே தரைப்பரப்பை ஒட்டி இது அதிக அளவிலும் மேலே செல்ல செல்ல அடர்த்தியும், அளவும் குறையும். நாம் முன்னரே கண்டது கார்பன் டை ஆக்ஸைடு தான் சூரிய ஒளியை வெப்பமாக மாற்றுகிறது. எனவே தரைப்பகுதியிலிருந்து மேலே செல்ல செல்ல கார்பன் டை ஆக்ஸைடின் அடர்த்தி குறைவதால் வெப்பம் உருவாவதும் குறைகிறது. இது உத்தேசமாக முதல் 11 கிமீ உயரம் வரை ஒவ்வொரு நூறு மீட்டருக்கும் 0.65 டிகிரி செல்சியல் என்கிற அளவில் குறையும்.

மேல்நோக்கி புறப்பட்ட நீராவி சுமார் 2 கிமீ முதல் 6 கிமீ வரை பயணிக்கிறது. காற்று ஓர் வெப்ப அரிதிர்கடத்தி. மேலும் மேலே செல்ல செல்ல காற்றழுத்தமும் குறைவதால் நீராவியிடமிருந்து வெப்பம் எளிதில் வெளியேறாது. ஆனால் காற்றின் அழுத்தம் சீராக குறையாமல் 2 லிருந்து 4 கிலோ மீட்டருக்கு மேலே திடீரென வெகுவாக குறையும்.

இயற்பியலில் ஓர் விதி உண்டு. என்னவென்றால் அழுத்தம் அதிகமுள்ள இடத்திலிருந்து திடீரென ஒரு வாயுவை அழுத்தம் குறைவான இடத்தை நோக்கி வேகமாக வெளியேற்றினால் (Throttling Action) அது சட்டென வெப்பத்தை இழந்து திரவமாகிவிடும். (குளிர் சாதனங்கள் பற்றி படித்தவர்களுக்கு தெரியும்). அதன்படி திடீரென அழுத்தம் குறைவான இடத்திற்கு தள்ளப்படும்போது நீராவி வெப்பத்தை இழந்து நீர்த்துளியாக மாறிவிடும். ஆனால் அங்கெ காற்றின் அழுத்தம் வெகு குறைவு என்பதால் நீரின் மூலக்கூறு நீராவியாக இருக்கும்போது இருந்த அதே அளவிலேயே இருக்கும். நிலைதான் மாறியதே தவிர எடை கூடவில்லை. எனவே இன்னும் அங்கேயே மிதந்து கொண்டுதான் இருக்கும்.

நீராவி நீராக மாறும்போது வெளிப்பட்ட வெப்பத்தை ஏற்றுக்கொண்ட அருகிலுள்ள காற்று இந்த நீர்துளிகளை சுற்றி பொட்டலம் போல சுற்றிக்கொள்ளும். இந்த வெப்பகாற்றிலான பொட்டலமும் அதனுள்ளே இருக்கும் நீர்த்துளிகளே நாம் காணும் மேகம்.

தன்னுடைய எடையின் காரணமாக மேலேயும் செல்லாமல் கீழேயும் இறங்க முடியாமல் காற்றின் மேலேயே மிதந்து கொண்டிருக்கும். மேலே உள்ள காற்று இழுத்த திசைக்கெல்லாம் மிதந்தவாறே பறந்து செல்லும். ஒவ்வொரு மேகமும் சில மீட்டர் முதல் ஒன்றிரண்டு கிலோ மீட்டர் வரை உயரமும், பல கிலோமீட்டர் நீள அகலமும் கொண்டிருக்கும்.

மேகத்தின் அடர்த்தியை பொறுத்து அதன் ஒளி ஊடுருவும் தன்மை மாறுபடும். அடர்த்தி குறைவான மேகங்கள் கண்ணுக்கு புலப்படாது. ஓரளவிற்கு அடர்த்தி உள்ள மேகங்கள் வெண்மை நிறத்தில் தெரியும். அடர்த்தி அதிகமாக இருந்தால் கருப்பாக தெரியும்.

மேகம் மழையாக மாறும் விதம்:
மேகம் எப்படி மழையாக மாறுகிறது என அறியும் முன்னர் என்னென்ன மேகங்கள் இருக்கிறது என அறிவோம்.

அறிவியலில் மேகங்களின் தன்மை, இருப்பிடம் ஆகியவற்றைக்கொண்டு பலவிதங்களில் மேகங்களுக்கு பெயரிட்டிருந்தாலும் பொதுவான மூன்று வகைகளாக எடுத்துக்கொள்வோம். மழையை புரிந்துகொள்ள இவை போதும்.

இவை முறையே
(1) அடிவளிமேகம் 0.5 - 2 கிமீ உயரத்திலும், 6 - 8 டிகிரி செல்சியல் வெப்பத்திலும்,
(2) இடைவளி மேகம் 2 - 5 கிமீ உயரத்திலும், 2.5 - 4 டிகிரி வெப்பத்திலும்,
(3) உயர்வளி மேகம் 5 - 11 கிமீ உயரத்திலும், -30 டிகிரி வெப்பத்திலும் இருக்கும்.

பெரும்பாலும் வானில் அடிவளி மேகம் இருக்காது.

புவியிலிருந்து புறப்பட்ட நீராவி அவ்வளவையும் நீர்துளிகளாக மாற்றி இடைவளி மேகம் தான் சேமித்துக் கொண்டிருக்கும். இந்த மேகத்திடம் சிக்காமல் மேற்கொண்டு மேல்நோக்கி சென்றுவிட்ட நீர்த்துளிகள் உயர்வளி மேகத்தில் தஞ்சமடையும். அங்கெ நிலவும் மிகக்குறைவான வெப்பத்தால் நீர்த்துளிகள் அனைத்தும் பனித்துளியாக மாறிவிடும். எனினும் வெகு குறைவான எடை காரணமாக அவற்றால் கீழிறங்க முடியாது.

இடைவளி மேகம் கோர்த்துள்ள நீர்த்துளிகள் அளவு 0.01ட்ட் இருக்கும். இவை காற்றின் எடையை விட லேசானது என்பதால் இவற்றால் கீழிறங்க முடியாது. இதே போல லட்சம் துளிகள் இணைந்தால்தான் ஒரு மழைத்துளி உருவாக முடியும். மழைத்துளியால் மட்டும்தான் காற்றை கிழித்து கீழிறங்க முடியும். ஆனால் நீர்த்துளிகள் ஒன்றோடொன்று இணைய அழுத்தம் வேண்டும்.

எடை மிக்க காற்றெல்லாம் தரையோடு இருக்க 2 கிமீ உயரத்தில் அழுத்தத்தை உருவாக்க வாய்ப்பே இல்லை. எனில் நீர்த்துளிகள் எவ்வாறு மழைத்துளியாக உருவெடுப்பது..?
அதற்கும் இரண்டு வழிகள் உள்ளன.

ஒன்று: புவியிலிருந்து மேல்நோக்கி குளிர்ந்த காற்று வீச வேண்டும். அப்படி வீசினால் இந்த நீர்த்துளிகள் நிறைந்த மேகம் மேல்நோக்கி தள்ளப்படும். அவ்வாறு 5 கிமீ க்கும் மேலே தள்ளப்பட்டால் அங்குள்ள உயர்வளி மேகத்தில் உள்ள பனித்துளிகள் மீது மோதும். பனித்துளியானது நீர்த்துளிகளை ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ள செய்யவல்லது. ஒவ்வொரு சிறு பனித்துளியுடனும் சில நூறு நீர்த்துளிகள் ஒன்றிணைந்து சற்றே பெரிய நீர்த்துளியாக உருவெடுக்கும். இது உருவான இடம் வெகு உயரத்தில் உள்ளதால் இந்த நீர்த்துளியின் வெப்பநிலையும் -0 டிகிரி செல்சியசுக்கு குறைவாகவே இருக்கும்.

சற்றே பெரிதான நீர்த்துளி எடை காரணமாக சற்றே கீழிறங்கி அடிவளி மேகமாக உருவெடுக்கும். இதிலுள்ள நீர்த்துளிகள் பெரிதாக இருப்பதன் காரணமாக அடர்த்தி அதிகமாக இருப்பதால் இம்மேகங்கள் கறுப்பாக தெரியும். தொடர்ந்து புவியிலிருந்து குளிர்ந்த காற்று மேல்நோக்கி வீசினால் சில நூறு பெரிய நீர்த்துளிகள் ஒன்றோடொன்று ஒட்டி ஒற்றை மழைத்துளியாக மாறும். காற்றின் எடையை மீறி இறங்கும் அளவிற்கு நீர் கோர்த்தவுடனே அது மழையாக கீழிறங்க தொடங்கிவிடும்.

இரண்டு:
இடைவளி மேகங்கள் காற்றினால் அலைக்கழிக்கப்பட்டு நெடுந்தூரம் பயணிக்கும். இதனால் இதற்கு கீழேயுள்ள வெப்பமான காற்றின் மீது உரசியபடி செல்வதால் இம்மேகங்களில் நிலை மின்சாரம் தூண்டப்படும். நமது பள்ளிப்பாடத்தில் இருவேறு வெப்பநிலையில் உள்ள பொருட்களை ஒன்றோடொன்று உராயும்போது நிலைமின்சாரம் தூண்டப்படும் என்று படித்ததை நினைவில் கொள்ளுங்கள்.

மேகத்தில் உள்ள ஒவ்வொரு நீர்த்துளியும் அதனதன் தன்மைக்கேற்ப நேர்மின்னேற்றம் அல்லது எதிர்மின்னேற்றம் கொள்ளும். ஒத்த மின்னேற்ற துகள்கள் ஒன்றையொன்று எதிர்க்கும். மாறுபட்ட மின்னேற்ற துகள்கள் ஒன்றையொன்று ஈர்க்கும். இவ்விதியின்படி அதனதன் மின்னேற்றத்திற்கேற்ப நீர்த்துளிகள் ஒட்டிக்கொள்ளும். இவ்வாறு இணைய இணைய சிறு துளிகள் மழைத்துளி அளவிற்கு பெரிதாக கோர்த்துக்கொண்டு மழையாக மாறி கீழிறங்கிவிடும்.

நாம் மட்டுமல்ல.. இப்புவியில் உள்ள அனைத்தும் நனைகிறது.!

**- செந்தில் வி**

# விவசாயிகள் நாம்

உலகிற்கே சோறு இடும் கைகள்
சோற்றுக்காக ஏங்குவதா?

நெல் விளைய வயல் நடந்த கால்கள்
இன்று வண்டி பார்த்து ஓடுவதா ?

வரலாறு தெரியுமா உனக்கு..?

உலகிற்கு அரிசி என்னும் சொல்லை
அறிமுகப்படுத்தியதே தஞ்சை தரணி
தான்..

அழுவதற்கு நேரமில்லை ..
இனி இழப்பதற்கு ஒன்றுமில்லை ..
வீறு கொண்டு எழுந்து விடு..
ஆலம் விழுதாய் முளை விடு..

லட்சம் யானைகளை பழக்குவித்து
போர் தொழில் புரிந்த சோழதேசத்தவர்
நாம்..

இந்த ஒற்றை ''கஜா'' நம்மை
புரட்டியா போட்டுவிடும்..?

பாறையை மண்ணாக்கி.. மண்ணை
பொன்னாக்கிய விவசாயிகள் நாம்..

புதிதாய் உலகம் செய்வோம்..

கூடித் தொழில் செய்வோம் ..
கூட்டுபயிர் செய்வோம்..
ஒற்றை மரப்பயிர் மறுத்திடுவோம்..

கிடைக்கும் இடமெல்லாம்
விதைத்திடுவோம்..
விதைத்த இடமெல்லாம்
விளைவித்திடுவோம்..

உலகிற்கு சோறிட வேண்டும் ..
எழுந்து வா தோழா..

--
M.K.Rm. அருண்ரவி

---

# மனதோடு தவழ்வது

கனவோடு காண்பது
நினைவோடு வாழ்வது
நிசப்தமாய் கருவாவது
அன்பில் மலர்வது
பண்பில் சிறந்தது
சீரிய எழுத்தின் உச்சமாவது
வரை கொண்ட சொற்றொடர்க்கு
நிறை கொண்டு சேர்ப்பது
தீர்க்க வண்ணம் கொண்ட மனதிற்கு
எண்ணம் கொண்டு உறைவது
மன சிறகை கொண்டு மனம்
கொத்தியாய் பறப்பது

மகிழ்ச்சியின் உச்சம்
நெகிழ்ச்சியின் மிச்சம்

வரையறை புனைவது கரம்
சிந்தனையில் மீட்டுவது வரம்



- ஜானகிராமன்
உள்ளிக்கோட்டை

# கற்றது கஜா

கடந்த நவம்பர் 16 ஆம் தேதி நள்ளிரவு இரண்டு மணிக்கு வேதாரண்யத்தில் கரையேறிய கஜா புயல் வேதாரணியத்தை அழித்து,திருத்துறைப்பூண்டி பகுதிகளை சிதைத்து, மன்னார்குடி நகரை சின்னா பின்னமாக்கி தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் கோர தாண்டவம் ஆடி சென்றது.

விடியும் வரை அச்சத்தோடு பறக்கும் வீட்டு கூரைகளையும், விழும் மரங்களையும் பார்த்துக்கொண்டே விடிந்தது பொழுது.!

வீட்டை விட்டு வெளியே வந்தால் இது நாம் வசிக்கும் பகுதியா? என சந்தேகம் வந்தது. பெரும்பாலான மரங்கள் வீட்டிலும், தெருவிலும் வேரோடு சாய்ந்து கிடந்தன. சாலைகளில் நடந்து செல்வதே சிரமமாக இருந்தது. மன உளைச்சலோடு ரோட்டில் சென்றால் பெரும்பாலும் எல்லா மின் கம்பங்களும் வீழ்ந்து கிடந்தன. எப்படி, எப்போது மன்னார்குடி மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிக்கு மின்சாரம் கொடுக்கப் போகிறோம் என்கிற கவலையோடு நடந்தே அருகிலுள்ள என் பரவாக்கோட்டை கிராமத்திற்குச் சென்றேன்.

செல்லும் வழியில் எல்லாம் சாலை ஓரத்தில் நூற்றாண்டு காலம் இருந்த புளிய மரங்கள், மாமரங்கள், ஆலமரங்கள் என எல்லாமும் வேரோடு சாய்ந்து கிடந்தன. இந்த மரங்கள்தான் பேருந்தில் செல்லும் போது ஊரையே பல தலைமுறைகளாக அடையாளம் காட்டியது. அவைகள் வீழ்ந்து விட்ட போது ஊரின் அடையாளமே தெரியவில்லை. எங்கள் ஊர் பேருந்து நிறுத்தத்தில் உள்ள பெரிய ஆலமரம், ஊர் எல்லையில் இருந்த அரச மரம் வழி நெடுகிலும் இருந்த பொந்துள்ள புளிய மரங்களை காணவில்லை.



முனைவர். சா.சம்பத்
மன்னார்குடி

ஐம்பது வருட என் வாழ்நாளில் எனது கிராமத்தை இதைப் போல் நான் பார்த்ததில்லை. மனதில் சோகம் அப்பிக்கொள்ள வீட்டிற்கு சென்றேன். வீட்டில் யாரும் இல்லை. வயலுக்கு சென்றிருப்பதாக அறிந்து வயலுக்குச் சென்றேன். அங்கு தம்பியும் அம்மாவும் வயல் வரப்பில் சோகமாக உட்கார்ந்து இருந்தார்கள். சாய்ந்த தென்னை மரங்கள்,வீழ்ந்த போர்வெல் கம்பங்கள், சிதிலமடைந்த நெற்பயிர்கள் என எதிர்கால கவலையோடு என்னைப் பார்த்தனர் என் அம்மாவும், தம்பியும்...!?

பேச வாய் வரவில்லை..

என்ன சொல்வதென்று புரியவில்லை...

ஒரு ஆழ்ந்த மௌனத்திற்கிடையே என் அம்மாவிடம் கூறினேன். அம்மா, கஜா புயல் நம் வாழ்வாதாரம் முழுமையும் அழித்திருக்கலாம்,

ஆனால் நீங்கள் எனக்கு கொடுத்த கல்வியை அழிக்க முடியவில்லை, ‘‘நம்பிக்கையுடன் இருங்கள் எல்லாமும் திரும்பப் பெறலாம்‘‘.

நண்பர்களே! இந்த கஜா புயல் அடுத்த இளைய மாணவ தலைமுறைக்கு விடுக்கும் செய்தி இதுதான், சுனாமியும், ஒக்கி புயலும், தானே புயலும் அதைதான் சொல்லியது.

‘‘இந்த உலகத்தில் எல்லாமே அழியக் கூடியது ஒருவன் பெற்ற கல்வியைத் தவிர‘‘

அதனால் தான் ஔவையார்

‘‘பிச்சை புகினும்
கற்கை நன்றே‘‘
என்றார்.

ஏனெனில்

‘‘வெள்ளத்தால் போகாது...
வெந்தனலால் வேகாது ‘‘
கல்வி மட்டுமே..,!

இனியாவது விழித்துக் கொள்வோம்..!?
நன்றி..!?

--

**முனைவர்.சா.சம்பத்**

---

காதலன்
யாரும் வேண்டாம்!!
நாம் இருவர் மட்டும் செல்வோம்
விண்ணுலகத்திற்கு!
மேகம் என்ற அப்பா
காற்று என்ற அம்மா
சொந்தம் என்ற நட்சத்திரங்கள்
இடி என்ற மேள சத்தம்
மணப்பந்தலிட்ட வானவில்
ஓம குண்டம் என்ற சூரியன்
இனி வாழ்வோம் நீயும் நானும்
நந்தவன சோலையில்!!!

**பா. தமிழரசி**
2ஆம் ஆண்டு, இளங்கலை தமிழ்
அ.வீரைய வாண்டையார் நினைவு ஸ்ரீ புஷ்பம் கல்லூரி
பூண்டி

# உழவனின் கூக்குரல்

காலை உதித்த சூரியன் !! மாலை
மறையும் வரை!!
அதன் பின்னே ஓடிய உழவன்!!
விளைந்த நெல்லும்!!
விளைச்சல் தரும் விளைநிலமும்!!
உழவனின் உயிர்!!
நிலம் உழவ வளர்க்கும் மகன்!!
உழவு மாடு!!
உணவு எங்கும் வேண்டும் என்பதால்
ஒரு வேளை கூழ் குடித்து பயிர்
செய்கிறான் உழவன்!!

மகசூல் தரும் காலம் என்று பயிர்
செய்த காலம் மாறிப் போனது!!
மண் மணம் மாறா மண்ணில்
மண் புழுவை கூட
மனித உயிர் கொல்லி என்று
கொல்லுகின்றனர் இன்றைய வளரும்
விஞ்ஞானிகள்!
விளைந்த நெல்லையும் வீட்டிற்கு
வைக்காமல்
நாட்டிற்கு ஏற்றுமதி செய்தான்
உழவன்!
இன்று ஒரு பிடி உணவு இன்றி, உடை
இன்றி, இருப்பிடம் இன்றி, நிற்கிறான்
வீதியில்!

அழும் குழந்தைக்கு எவ்வளவு பால்
கொடுத்தாலும்
ஒரு பிடி சோறு ஊட்டினால் மட்டுமே
அது மகிழ்ச்சியாக விளையாடும்.
அப்படிப்பட்ட உழவனின் குழந்தைகள்
இன்று வீதியில் கொடுக்கும்
பன்னுக்கும், ரொட்டிக்கும் கூட அடித்து
பிடித்து வாங்கிக் கொள்கின்றனர்!


பசி என்று வருபவர்களுக்கு விருந்து
போட்டு உபசரித்த மக்கள் எம் மாவட்ட
மக்கள்!!
இன்று
அன்னையாக வளர்த்த மாமரம்,
பிள்ளையாக வளர்த்த தென்னை மரம்,
உறவாக வளர்த்த வாழைமரம்,
என்று
எம் வாழ்வில் உயிரை தவிர
அனைத்தையும் அழித்து விட்டது
கஜா புயல் என்னும் அரக்க யானை!

இந்த அரக்கனை பார்த்து நாங்கள்
கலங்கவில்லை!!
அரக்க குணத்தோடு வாழும் மனிதனை
பார்த்துதான் எம் மனம் கலங்குகிறது!
மனம் இல்லையா! இல்லை,
இவர்களுக்கு மனசாட்சி இல்லையா!
மனம் கலங்கும் இந்த துக்க
வேளையில் ஆறுதல் சொல்ல கூட
வரவில்லை எவரும்
எம் இளைஞர்களை தவிர!!
அணைக்க தெரிந்த எங்களுக்கு,
திரும்ப அடிக்கவும் தெரியும்!

ஆனால்
நாங்கள் மனம் இல்லா மிருகம்
இல்லை!
அனைவரும் கரம் இணைப்போம்!
அனைத்தையும் மீட்போம்!
மீண்டு வருவோம் உழவனாக!!!

- B. எழிலரசி
முதலாம் ஆண்டு, B.Sc, Geography
வீரைய வாண்டையார் நினைவு ஸ்ரீ
புஷ்பம் கல்லூரி
பூண்டி

## மன்னார்குடி ரா. ராஜேஷ்



எழுதும் தொடர் முதல் அத்தியாயம் (பகுதி 8)

# செண்பக வனம்

செண்பக வனத்தில் நடந்த எல்லாவற்றையும் மாரீசனிடம் பிறைசூடன் சொல்லிக் கொண்டிருந்த அதே நேரத்திற்கு சற்று முன்பு..

தஞ்சை மாநகரின் வடக்கே குறிஞ்சியும் முல்லையும் கொஞ்சி விளையாடும் நிலம்.

சைவ மதத்தின் போற்றுதலுக்குரிய சிவ தலங்களில் அக்னி ஸ்தலம். பிரம்மனும் திருமாலும் சிவபெருமானின் அடியையும் முடியையும் காண போட்டி போட்டுக் கொண்ட சிவதலம் அது. ஆம் ''திருவண்ணாமலை.''

சங்க காலம் தொட்டு தென் தமிழகத்தில் பிரசித்தி பெற்ற சிவ தலமான திருவண்ணாமலையின் ''அண்ணாமலை நாதர்'' திருக்கோவில் தெய்வத்திரு சோழ சக்கரவர்த்தி கண்டராதித்தரின் மனைவியும் அன்றைய சோழ சக்கரவர்த்தி உத்தமசோழரின் தாயும் ஆன செம்பியன் மாதேவி அவர்களின் ஆணையின்பேரில் திருக்கோவிலை பெரிதாக்கும் பணிகள் நடந்து கொண்டிருந்தன.

அந்த நகரம் என்னதான் சங்ககாலம் தொட்டு வளர்ந்து வரும் நகரமானலும் அங்கு குடியேறியவர்களும் அரசு அதிகாரியாக நியமித்தவர்களும் இறைவனை தரிசிக்க வந்தவர்களும் வாணிபம் செய்ய வந்தவர்களும் அந்த நிலத்திற்கு முற்றிலும் மாறுபட்டவர்களாக இருந்தனர். குறிஞ்சியும் முல்லையும் கலந்த அந்த நிலத்தில் வாழும் மக்களின் மனநிலை மருதநிலத்து மக்களோடு ஒன்று போவதில் பல வேறுபாடுகள் இருந்தன.

மருதநிலத்து மக்கள் தங்களை உயர்ந்தவர்களாகவும் குறிஞ்சியும் முல்லையும் கலந்த மக்களை சற்று தாழ்ந்தவர்களாகவும் பார்க்கும் மனோபாவம் அங்கே மேலோங்கி இருந்த காரணத்தினால் இவர்களுக்கு இடையே உள்ள மனக்கசப்பு அதிகமாகி மேலும் அதிகரித்தது இதன் இடையிடையே சில விஷமிகளின் துர்போதனையால் இருபிரிவினருக்கும் இடையே பலமோதல்கள் ஏற்பட்டு ஒற்றுமை இல்லாத சூழல் அங்கு நிலவத்தான் செய்தது. அது

வெளியில் இருந்து வருபவர்களுக்கு அத்தனை எளிதாக தெரியாது  என்றாலும் உள்ளுக்குள் இந்த நெருப்பு புகைந்துக் கொண்டிருந்தது. அன்றைய தினத்தில் அந்த நகரத்தில் இருப்பவர்கள் எல்லாம் மருதநிலத்துகாரர்களாய் இருந்தனர்.

அந்த நகரத்தில் இருக்கவேண்டிய மக்கள் காடுகளிலும் மலைகளிலும் வாழ்ந்து வந்தனர் அவர்களுக்கும் நகரத்து மக்களுக்குமான தொடர்பு அறவே இல்லாமல் இருந்தது.
ஆனால் சமீபகாலமாக சிவனருள் செல்வரான ‘‘உத்தம சோழர்’’ அரியணை ஏறிய முதல் பல மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன, அதிகாரிகள் மாற்றப்பட்டனர் பல சமூக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் காரணமாக அவர்களுக்குள் உள்ள வேற்றுமை வேறுபாடுகள் குறைந்து சகஜ நிலைக்கு மாறி வர தொடங்கியிருந்தது திருவண்ணாமலை.. சரி நாம் கதைக்கு வருவோமா...

இருள் விலகாத பனி பொழியும் அந்த விடியற்காலையில்..

திருவண்ணாமலையிலிருந்து திருக்கோவிலூர் செல்லும் அந்த ராஜபாதையில்.. அதுவரை வேகமாய் ஓடி வந்த அந்த இரண்டு குதிரைகளும்  மெல்ல தனது வேகங்களை குறைந்து சகஜமாக நடந்து வரும்  நிலைக்கு வர தொடங்கியதன் காரணம் அதன் மேல் வீற்றிருந்த எஜமானர்கள் என்று நமக்கு சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அந்த கடுங்குளிர் பனியிலும்  தீப்பிழம்பாய் எரிந்து கொண்டிருந்த இரு குதிரை ஓட்டிகளின் கண்கள்.. அந்த ராஜபாதையின் இருமருங்கிலும் இருக்கும் முல்லை நிலத்தின் காடுகளின் இடையிடையே தற்காலிக கூடாரங்களும் அதன் முன்பாக தீவட்டி குன்றுகளும் இருப்பதை காணத் தவறவில்லை..

அந்த குதிரை வீரர்களில் ஒருவர் உயரமாகவும் சற்று மெலிந்தும் காணப்பட்டார் மற்றவர் நல்ல உடற்கட்டும் சராசரி உயரமாகவும் இருந்தார்கள் நெற்றியில் திருநீறு முகத்தில் தாடியுமாய் தலையில் முண்டாசும் மேல்சட்டை அதன் மீது குளிரை தாங்கும் வண்ணம் போர்வையும் போர்த்தி கொண்டு வழிபோக்கர்கள் போல  வந்துகொண்டிருந்த அந்த வழியானது  ‘‘சிவபதம் அடைந்த சோழ சக்கரவர்த்தி கண்டராதித்தர் பேரில் நிர்மாணிக்கப்பட்ட கண்டராதித்தபுறம்’’ என்னும் ஊரில் இருந்து புறப்படும்  ராஜபாதை.

திருக்கோவிலுரிலிருந்து திருவண்ணாமலை செல்லும் ராஜ பாதைக்கு இடையே கலக்கிறது அந்த இடத்திற்கு ‘‘முச்சந்தி பெரும்பாதை’’ என்று அந்த நாட்களில் பிரசித்தி பெற்று விளங்கியது. அந்த இடத்தின் அருகே சாலையோரங்களில் மூன்று பெரும் சத்திரங்கள் அந்த வழியில் போவோற்கும் வருவோற்கும் சேவை செய்யும் வண்ணம் கண்டராதித்தர் சக்கரவர்த்தியின் காலத்தில் இருந்து செயல்பட்டு வந்தன..
வழிப்போக்கர்கள் போல வந்திருந்த அந்த இரண்டு குதிரை வீரர்களும் முதலாம் சத்திரத்தின் முன்பே கீழிறங்கி குதிரைகளை பக்கத்தில் இருந்த மரத்தில் கட்ட போனவர்களை  வெளியில் நின்று கொண்டிருந்த சத்திர ஊழியர்
‘‘ஐயா என்ன செய்கிறீர்கள் ? இங்கே எல்லாம் குதிரையை கட்டக்கூடாது’’ என்றான்

‘‘பிறகு எங்கே கட்டுவது’’? என்று கேட்டார் இருவரில் ஒருவரான  மெலிந்தவர்.

அதற்கு சத்திரத்தின் ஊழியர் ‘‘ ஐயா இங்கே குதிரை கட்டுவதற்கு அனுமதி இல்லை . கட்டுவதற்கான இடமும் இப்போது இங்கே இல்லை .இங்கு உள்ள சத்திரங்களின் குதிரை தொழுவம் முழுவதும் நிரம்பி இருக்கின்றன அதனால் உங்களின் குதிரைகளை கட்டிப்பராமரிக்க இங்கு இடமில்லை ஆட்களும் இல்லை அதனால் மன்னிக்கவும் ‘‘ என்றான். சத்திர ஊழியன்.

‘‘ஓ அப்படியா அப்படி என்ன விசேஷம் இங்கே இத்தனை கூட்டத்திற்கு என்றார் ? அதே வழிபோக்கர் .

‘‘தெரியவில்லை ஐயா, திடீரென்று இப்படி கூட்டம் நிரம்பி வழிகிறது. நீங்கள் தவறாக நினைக்கவில்லை என்றால் அதோ சாலைக்கு மறுபக்கத்தில் இருக்கும் மரத்தில் உங்கள் குதிரைகளை கட்டிக் கொள்ளுங்கள், வேண்டுமென்றால் உங்கள் குதிரைகளின் தாகம் தணிக்க நீரும், கொள்ளும் தர ஏற்பாடு செய்கிறேன். ஆனால் அதற்கு தனியாக கட்டணம் உண்டு. உள்ளே விசாரிக்கவும்‘‘ என்றான். சத்திரத்தின் ஊழியர்.

‘‘சரி ஆகட்டும் அவ்வாறே செய்து கொள்கிறோம்‘‘ என்று கூறிய அதே மெலிந்த வழிப்போக்கர் . சாலையின் மறுபக்கத்தில் உள்ள சிறு மரங்களில் கட்டி விட்டு மீண்டும் சத்திரத்திற்கு நுழைந்தனர்..
அந்த சத்திரத்தில் உள்ளே வட்டமாகவும் சதுரமாகவும் போடப்பட்ட மேசைகளில் ஆட்கள் கூட்டம் நிரம்பி இருந்தது அந்தக் கூட்டங்களில் ஓரத்திலே ஒரு மூலையில் இருவர் மட்டும் இருக்கும் வண்ணம் ஒரு மேஜையும் நாற்காலியும் இருந்ததைக் கண்ட அவர்கள் அங்கே சென்று அமர்ந்தனர் . அதனைக் கண்ட அந்த சத்திரத்தின் ஊழியன் ஒருவன் அவர்களிடம் சென்று ‘‘ஐயா வணக்கம் உங்களுக்கு சாப்பிடவோ குடிக்கவோ ஏதேனும் வேண்டுமா? எங்களிடம் திரிகடுகமும் பருத்திப்பால் மிக அருமையா இருக்கும் உங்களுக்கு விருப்பம் எதுவென்று சொன்னால் எடுத்து வருகிறேன்‘‘ என்று சொல்லி அவரே 3 முறை மேசை தட்டினார்.. ‘‘சூடான பருத்திப் பால் எடுத்து வாருங்கள்‘‘ என்று கூறிய நமது மெலிந்த வழிப்போக்கனும் அதேபோல தட்டினார்.
சத்திர பணியாளரின் கண்களில் மகிழ்ச்சி பொங்கியது இருவரையும் சற்று உற்றுப் பார்த்தார். இதோ இப்போது வருகிறேன் என்று கூறிய சத்திர பணியாளர் திரும்பிச்சென்றார்.

வெகு சீக்கிரத்தில் திரும்பி வந்த அந்த ஊழியரின் கைகளில் இரண்டு கோப்பைகள் இருந்தன. அதை இருவருக்கும் அருந்த கொடுத்துவிட்டு ‘‘ஐயா உங்களின் குதிரைகள் எங்கே இருக்கின்றன அவைகளுக்கு நீர் வேண்டுமா? நான் பார்த்துக் கொள்கிறேன் எங்கே இருக்கின்றன நீங்கள் என்னுடன் வந்து சற்று காண்பிக்க முடியுமா‘‘? என்று கேட்டார் அந்த சத்திரத்து ஊழியர்.

‘‘அதற்கென்ன வாருங்கள் காட்டுகிறேன்‘‘ என்றார் அந்த மெலிந்த வழிப்போக்கர். அந்த இரண்டு வழிப்போக்கர்களும் சத்திர பணியாளரும் சேர்ந்து குதிரையின் இடத்திற்கு சென்றார்கள்.

குதிரை கட்டிய இடம் வந்ததும் சத்திரத்தில் பணியால் மட்டும் காட்டுக்குள் ஓடினார் சுற்றுமுற்றும் பார்த்தார் .இடமும் வலமுமாய் ஓடினார். கீழே கிடந்த கற்களை எடுத்து அங்குமிங்கும் வீசினார் பிறகு குதிரை கட்டி இருந்த இடத்திற்கு திரும்பி வந்தார். ராஜபாதையில் ஏறினார், அங்குமிங்கும் நோக்கினார் மீண்டும் திரும்பி வந்தார். இவரின் இந்த செயல்களை கண்ட இரண்டு வழிப்போக்கர்களும் தங்களுக்குள் சிரித்துக் கொண்டனர். திரும்பி வந்த அந்த சத்திர பணியாளரின் கைகளை பிடித்து அவரை நிறுத்திய அந்த மெலிந்த வழிப்போக்கர் . ‘‘அடேய் ருத்ரா நீ இன்னும் மாறவே இல்லை . ஏன் பதட்டபப்படுகிறாய் ஒரு இடத்தில் நில்’’ நான் இங்குள்ள பாதுகாப்பை உறுதி செய்துவிட்டுத்தான் குதிரையை இங்கே கட்டினேன்‘‘ என்றார்.

அதைக் கேட்ட மாத்திரத்தில் அவரை திரும்பி பார்த்த சத்திர பணியாளரான ருத்ரன் ‘‘ சசி என் நண்பா சசிதரா  உனக்கு இன்னும் என்னை ஞாபகம் இருக்கிறதா‘‘ என்றான். ‘‘என்னடா இப்படி கேட்டு விட்டாய்’’ ‘‘பாம்பனி ஆற்றையும், செண்பகவனத்து வாசனை நிறைந்த காற்றையும், என் நண்பர்களையும் எப்படி மறப்பேன் ? என்று நினைத்தாய்’’ என்று கூறிய சசிதரன் சிரித்துக்கொண்டே ருத்ரனை பாசமாக  அணைத்துக்கொண்டார். அப்போது சசிதரனுடன் வந்திருந்த அந்த மற்றொருவரை கண்ட ருத்ரன் அவரை நன்றாக உற்றுப் பார்த்தான்  சத்தியம் உணர்ந்த அவனுக்கு சப்தநாடியும் நின்று மீண்டும் உயிர் பெற்றது. இதயத்துடிப்பு அதிகமானது, கண்ணில் நீர் பொங்கியது. அவனது கைகள் அவனையும் அறியாமல் நடுங்கத் தொடங்கின ‘‘நான் எவ்வளவு பெரிய முட்டாள்‘‘ என்று தனக்குத்தானே நினைத்துக்கொண்டு ‘‘ஐயனே என்னை மன்னித்துவிடுங்கள்’’ என்று மண்டியிட போனவனை தடுத்து நிறுத்தி அவர் ‘‘பரவாயில்லை ருத்ரா’’ என்று சொன்னார்.

ஐயனே உங்கள் வாயிலிருந்து என் பெயர் கேட்க நான் எத்தனை பாக்கியம் செய்திருக்கிறேன்.என் வாழ்நாளில் உங்களை ஒருமுறையேனும் நேரில் பார்த்துவிட வேண்டும் என்று ஆசை கொண்டிருந்தேன். ஆனால் இன்றோ நீங்கள் என் பெயர் சொல்லி அழைக்க பெற்றேன். அடுத்த கணமே மரணம் வந்தாலும் மனநிறைவோடு ஏற்றுக்கொள்வேன் என்றார் ருத்திரன் .

‘‘இவர்களின் இந்த தூய  அன்பிற்கு நான் என்ன கைமாறு செய்யப் போகிறேன்’’ என்று தனக்குள் நினைத்துக் கொண்ட அந்த மற்றொருவர் ‘‘ருத்ரா இனி ஒருமுறை அப்படி சொல்லாதே உன்  போன்றவர்களால்தான் சோழம்  நிலைக்கிறது’’
என்றவர் ‘‘சரி அது போகட்டும் உனது ஓலை கிடைக்கப் பெற்றோம் இப்போது இங்கு உள்ள நிலவரத்தை சொல்லு விவரமாக’’. என்றார்.

‘‘ஐயா மாரிராசாவின் அறிவுரையின் பேரில்
நான் பத்து மாதங்களுக்கு முன்பு இந்த சத்திரத்தில் பணியில் சேர்ந்தேன். கடந்த பௌர்ணமி வரை இந்த சத்திரத்திற்கு வந்து தங்குபவர்கள் எண்ணிக்கை மிகக்குறைவாகத்தான் இருந்தது. ஆனால் கடந்த இரண்டு நாட்களாக குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் பவுர்ணமி கழித்து இரண்டாம் மூன்றாம் நாட்களிலிருந்து அதிகரித்தது. பொதுவாக இங்கு வருபவர்கள் இரவு தங்கிவிட்டு அடுத்த நாள் பயணம் தொடங்குவது வழக்கம். ஆனால் இந்த இரண்டு தினங்களில் அதாவது இரண்டாம் நாள் மூன்றாம் நாள்

வந்து இங்கு வருபவர்கள் எல்லோரும் இங்கேயே தங்கலானார்கள். இந்த மூன்று சத்திரங்களை சேர்த்தாலும் அதிகமாக 300லிருந்து 400 ஆட்கள் வரையில் தான் இங்கு தங்கலாம். அதற்கு மேல் உள்ளவர்களுக்கு இங்கு இடமில்லை. நேற்று மாலை வரை இந்த நிலவரம் 400 தாண்டியது. மேலும் மேலும் இங்கே வருபவர்கள் இந்த காடுகளுக்குள் நல்ல இடங்களை தேர்ந்தெடுத்து கூடாரங்கள் அமைத்து கொண்டு தங்களானார்கள். அவர்களுக்கு வேண்டிய உணவு மற்றும் நீரை சத்திரத்திலிருந்து அல்லது இந்த காடுகளில் இருக்கும்  மரம் செடி கொடிகளிலிருந்து  எடுத்துக்கொண்டு இங்கேயே தங்கி இருக்கிறார்கள். அதோ அங்கே இருக்கிறது பாருங்கள்  ஒரு சிறிய குன்று அதில் நேற்று நீர் எடுக்க சென்ற சிலர் அங்கிருந்து இரண்டு வரையாடுகளை வேட்டையாடிக் கொண்டுவந்து சமைக்க தொடங்கிவிட்டனர். நான் மாரிராசருக்கு ஓலை அனுப்பிய நேரத்தில் இங்கு இருந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 500. அந்த 500 ஆட்களின் வருகையை கண்டு சந்தேகம் அடைந்துதான் நான் அந்த ஓலையை அனுப்பினேன்.

ஆனால் இன்று காலை நிலவரப்படி 1100 அல்லது 1,150 பேர் வந்திருக்கிறார்கள். இனியும் வருவார்களா என்று தெரியவில்லை இப்படி வந்திருப்பவர்கள் அனைவரும் பேசும் மொழி தமிழும் அல்ல. அதாவது தெலுங்கிலும் கன்னடத்திலும் துளுவிலும் பேசிக்கொள்கிறார்கள். இவர்களை தொடர்ந்து ஒருவன் கண்காணித்துக் கொண்டே வருகிறான். இடையிடையே வேறு வேறு வேடத்தில் வரும் அவன்  வேறு வேறு ஆட்களோடு பேசுகிறான். அவன் ஒவ்வொரு வேடத்தில் வரும் போதும் வேறு வேறு ஆட்களோடு பேசுகிறார்'' என்ற ருத்திரணை அப்போது இடைமறித்த சசி ''அது எப்படி உனக்கு தெரிந்தது ஒரே ஆள்தான் பலவேறு வேடத்தில் வருகிறார்''?  என்று கேட்டார்.

''உங்கள் கேள்வி சரியானது தான் நானும் முதலில் வேறு வேறு ஆள்  என்றுதான் நினைத்தேன். ஆனால் அவனது கையில் ஒரு குறியீடு பச்சை குத்தி இருக்கிறார் அது மிகவும் புதிதாய் உள்ளது அதை விவரிக்க என்னால் இயலவில்லை, உங்களுக்கு அதை பிறகு வரைந்து காட்டுகிறேன் முதலில் அங்குள்ள நிலவரத்தை முழுவதும் சொல்லி விடுகிறேன். இங்கு வந்திருப்பவர்கள் யாரும் வழிப்போக்கர்கள் அல்ல, அவர்கள் போரில் கலந்து கொண்டவர்கள் அல்லது திருடர்களாகவும் அல்லது ஆயுதப் பயிற்சி எடுத்தவர்கள் ஆக இருக்க வேண்டும். ஏனெனில் அவர்களிடம் ஆயுதங்கள் இருக்கின்றன. போர்களின் போது ஏற்படும் காயங்கள்  வடுக்கள் அவர்கள் கைகளில் கால்களில் இருக்கிறது இதனால் தான் நான் முதலில் சந்தேகபட்டு மாரிராசருக்கு தகவல் அனுப்பினேன்  என்றான் ருத்ரன்.

வந்தவர்கள் யார்.?
எதற்காக வந்திருக்கிறார்கள் ?

## பயணம் தொடரும் ...

# நிலவை நோக்கி



ரா. ராஜராஜன்
மன்னார்குடி

அறிவினாலும் ஆராய்ச்சியினாலும் இயற்கையை விட சிறந்த ஒன்றை உருவாக்க முடியும் என்று மனித இனம் நம்புவது கேலிக்குரிய மாயை
- மசனோபு ஃபுக்குவோக்கா

புத்தாண்டு வாழ்த்துகள் நிலன்! வாழ்த்துகள் சாரல்! நிலன், சரியாக 9.45க்கு நம் வீட்டு வரவேற்பறைக்கு Airbox வந்துவிடும். இங்கிருந்து 2 நிமிட வான் பயணத்தில் நாம் கோடை Hyperloop நிலையத்தில் இணைத்திடுவோம். அங்கிருந்து 5 நிமிட Hyperloop பயணத்தில் உதகை, பிறகு 2 நிமிட Airbox பயணத்தில் நம்முடைய ஆய்வகத்தின் மெய்நிகர் திரை கூட்ட அறைக்கு சென்றிடலாம். சரியாக 10 மணிக்கு ''நிலவை நோக்கி திட்டத்தின் மெய்நிகர் கூட்டத்தை ஆரம்பித்திடலாம். நன்றி சாரல் நான் தயாராக உள்ளேன்.

நிலன், அதேபோல் பங்கேற்கும் 5 ஆயிரம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கும் நினைவூட்டல் செய்தியை அனுப்பி விட்டேன். அந்த 5 ஆயிரம் பேர் சார்ந்த 5 மொழிகளின் மொழிபெயர்ப்பு உள்ளீட்டையும் அவர்களின் மெய்நிகர் கணக்கிற்கு பதிவேற்றிவிட்டேன். மகிழ்ச்சி சாரல். சாரல், நான் இன்று என் தாய் மொழி தமிழில் அவர்களுடன் உரையாட போகிறேன். மிக்க மகிழ்ச்சி நிலன். என்னுடைய தாய் மொழி என்ன நிலன்?. சாரல், நீ ஒரு இயந்திரம், உனக்கு நான் கொடுத்த உள்ளீட்டு மொழி தான் தாய் மொழி. அப்படி எனில் நானும் உங்கள் மொழியை சார்ந்தவள் தான். எனக்கும் நீங்கள் தமிழை தானே உள்ளீட்டு மொழியாக கொடுத்துள்ளீர்கள். ஆம் சாரல், உனக்கும் தாய் மொழி தமிழ் தான். நம்மை போன்று தமிழை தாய்மொழியாக கொண்ட ஆயிரம் பேர் இந்த 5 ஆயிரம் நபர்களில் இருக்கிறார்கள். நிலன், நானும் உங்கள் மொழியைச் சார்ந்தவள் என்பதில் பெரும் மகிழ்ச்சி.

வணக்கம், கோடை நிலையம் உங்களை அன்புடன் வரவேற்கிறது. உங்கள் பயணம் மகிழ்வாகட்டும். நிலன் இது யாருடைய குரல்?
இவ்வளவு இனிமையாக உள்ளதே! ஆம் சாரல், இந்த குரலின் சொந்தக்காரர் S. ஜானகி என்ற பாடகி. சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் சென்னையில் வாழ்ந்தவர். அவரின் பாடலில் உள்ள அவரின் குரலை பிரித்து நம்முடைய இந்த நிலையத்தின் வரவேற்பு குரலாக உள்ளீட்டுள்ளேன். பாடகியா! அப்படியெனில் புரியவில்லை நிலன். இரு சாரல், உனக்கு அவர் குரலில் ஒரு பாடலை ஒலிக்க விடுகிறேன். இது அவர் பாடிய பாடல் அல்ல. இன்னொருவரின் பாடலில் அவருடைய குரலை உள்ளீடு செய்துள்ளேன். என சொல்லிக்கொண்டே நிலன் அவனுடைய HumanchipI Activate செய்தான். யமுனை யாற்றிலே, S.ஜானகி என நிலன் கட்டளையிட்டான். ''யமுனை ஆற்றிலே ஈர காற்றிலே'' என பாடல் ஒலிக்க தொடங்கியது. பாடல் முடிவதற்கும் உதகை நிலையத்தை அடைவதற்கும் சரியாக இருந்தது. நிலன், உங்களுக்கு எப்படி இப்பாடல் தெரியும்? சாரல், அது பெரிய கதை. கூட்டம் முடிந்ததும் விவரிக்கிறேன். நல்லது நிலன், அதே போல் சென்னை என்றீரே! அது எங்குள்ளது? அதனையும் சேர்த்து சொல்லுங்கள். கண்டிப்பாக சாரல்.

வணக்கம் நண்பர்களே, இந்த 23ஆம் நூற்றாண்டின் முதல் நாளில் உங்களுடன் உரையாடுவது மிக்க மகிழ்ச்சி. உங்களில் சிலருக்கு இந்த நேரம் உறங்கும் நேரமாக இருக்கலாம். அதற்காக என்னை மன்னிக்கவும். எப்பொழுதும் போன்ற அறிவிப்பெனில் உங்களுக்கு நான் காணொலியாகவே அனுப்பியிருப்பேன். ஆனால் இது மிக முக்கியமான வரலாற்றில் நிலைத்து நிற்கும் ஓர் அறிவிப்பு. அதனால் தான் நானே நேரடியாக சொல்ல இம்மெய்நிகர் கூட்டத்தை ஏற்பாடு செய்தேன்.

முதலில் உங்களுக்கு புத்தாண்டு வாழ்த்துகள். இந்த 1-1-2301 நாள் வரலாற்றின் இன்னுமொரு புரட்சியை ஏற்படுத்த கூடிய நாள். ஆம் நாம் நம்முடைய எர்த்- 2 திட்டத்தை செயல்படுத்தும் நேரம் வந்துவிட்டது. இது 2 முக்கிய அம்சங்களை கொண்டது. ஒன்று எர்த்-2 உருவாக்கம் மற்றும் 2வது அதற்கு ஏற்றாற்போல் நம் உடலில் செய்ய போகும் மாற்றங்கள் . இந்த 2ஐயும் பற்றி உங்களுக்கு ஓரளவேனும் தெரியும் என நினைக்கிறேன். தற்பொழுது இன்னும் விரிவாக சொல்கிறேன். இன்னும் 100 நாட்களில் நாம் இந்த பூமியிலிருந்து எர்த்-2விற்கு செல்ல போகிறோம் ( அனைவரும் ஆர்ப்பரிக்கிறார்கள் ).

முதலாவதாக இந்த எர்த் - 2வின் முழு படம், உங்கள் மெய்நிகர் திரையில் தற்பொழுது வர போகிறது. இதோ உங்களுக்காக ( மீண்டும் ஆர்ப்பரிப்பு ). தற்பொழுது நாம் பார்த்துக் கொண்டிருக்கும் எர்த்-2 என்பது நம்முடைய பூமிக்கு இணையாக நிலவுக்கும் பூமிக்கும் இடையில் பூமிக்கு அருகாமையில் பூமியினூடே சுற்றும் வகையில் நிலைநிறுத்தியுள்ளோம். பூமிக்கும் எர்த்-2விற்கும் நிலவிற்கும் இடையிலான தூரத்தையும் ஈர்ப்புவிசையையும் கணக்கிட்டு அதற்கேற்றாற்போல் வடிவமைத்துள்ளோம். இங்கு அனைவருக்குமான வீடுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த எர்த்-2 வில் நாம் சரியாக 10 ஆண்டுகள் வசிக்க உள்ளோம்.

நாம் இந்த பூமியில் கற்றுக்கொண்ட மிகப்பெரிய பாடம் இயற்கையை பாதுகாப்பதே. இயற்கையை அழித்ததன் காரணமாக இப்பூமியில் வாழ இயலா சூழலை ஏற்படுத்திவிட்டோம். ஆகவே நாம் அடுத்துவரும் 10 ஆண்டுகளில் ஒன்றுமே இல்லாத எர்த்-2வில் இயற்கையை வளர்க்க போகிறோம். அதே நேரத்தில் இதே பத்தாண்டுகளில் சாரலுடன் வடிவமைக்கப்பட்ட எந்திரங்கள் நிலாவில் நாம் தங்க ஏற்றதொரு சூழலை ஏற்படுத்திவிடும். சரியாக எர்த் -2வில் குடியேறிய 10 ஆண்டுகள் கழித்து அதாவது 10-04-2311 அன்று நாம் அனைவரும் எர்த்-2விலிருந்து நிலவிற்கு குடியேற வேண்டும். இந்த 10 ஆண்டுகளில் இயற்கையை உருவாக்க நாம் செய்த அனைத்து சோதனைகளையும் அங்கு வெற்றிகரமாக செய்து மீதமுள்ள மக்களும் பூமியிலிருந்து நிலவிற்கு முழுமையாக குடியேறுவதற்கு ஏற்றாற்போன்ற இயற்கை சூழலை ஏற்படுத்த வேண்டும். நாம் தான் இந்த எர்த்-2விற்கும் மற்றும் நிலவில் வாழ்வதற்கும் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக முன்னோர்களாக இருக்க போகிறோம் (மீண்டும் ஆர்ப்பரிப்பு)

அடுத்ததாக நம் உடலில் செய்ய போகும் மாற்றங்களை பற்றி உங்களுக்கு குறிப்பிடுகிறேன். இந்த நாள் நம் உடலியலில் இன்னுமொரு பொன்நாள். அதாவது உங்களுடைய உடல்களில் உள்ள அனைத்து உறுப்புகளுக்கும் பதிலாக மாற்று உறுப்புகள்

பொருத்தப்படும் மூளையை தவிர. இந்த பாகங்கள் AOSI (Artificial Organs System Intelligence) என்னும் தொழில்நுட்பத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட நீங்கள் அனைவரும் சாரலை போன்ற உடலையும் உங்களுடைய மூளையையும் கொண்டு அங்கு வாழ்வீர்கள். உங்களுக்கு பசி, தூக்கம், நோய், உறுப்பு செயலிழப்பு என ஏதும் நிகழாது. சாவென்பதே கிடையாது, மூளை செயலிழப்பை தவிர. உங்களுக்கு கொடுக்கப்பட்ட ஒரே வேலை அங்கு இயற்கையை வளர்ப்பது தான். உங்கள் மூளையை தவிர அனைத்து உறுப்புகளும் இங்கு பத்திரமாக வைக்கப்பட்டு நீங்கள் நிலவில் காலடி வைத்ததும் உங்களுக்கு மீண்டும் பொருத்தப்படும். ஆக இந்த எர்த்-2 வில் நீங்கள் 10 ஆண்டு செலவிட்டாலும் உங்களுடைய அனைத்து உறுப்புகளுக்கும் இந்த 10 வயது கூடாது.

இந்த திட்டத்திற்கு உங்களை ஏன் தேர்வு செய்தேன், மூளையை மட்டும் ஏன் மாற்றவில்லை அல்லது சாரலை போன்ற இயந்திரங்களை கொண்டே ஏன் இந்த எர்த்-2 திட்டத்தை செயல்படுத்த கூடாது என்றொரு கேள்வி உங்களுக்கு எழுந்திருக்கும் என்பது எனக்கு புரிகிறது. இதோ சொல்கிறேன், நீங்கள் 5 ஆயிரம் பேரும் 5 தொன்மையான மொழி குடும்பத்தைச் சார்ந்தவர்கள். நீங்கள் உங்கள் மொழியை இன்றுவரை பல்லாயிரக்கணக்கான ஆண்டாக தக்க வைத்துக் கொண்டுள்ளீர்கள். இதற்கு காரணம் உங்கள் தொன்மை உங்கள் மூளையில் சேமிக்கப்பட்டுள்ளது. அதனால் தான் எவ்வளவு தாக்குதலையும் பாதிப்புகளையும் அழிவுகளையும் சந்தித்தாலும் நீங்கள் உங்கள் மொழியை இழக்காமல் தக்க வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். அதேபோல் இந்த மனித சமூகத்தை உருவாக்கியதும் நீங்கள் தான். உங்களால் தான் இந்த சமூகத்தை அழிவிலிருந்து மீட்க இயலும். இந்த தொன்மை உங்களுக்கே தெரியாமல் உங்கள் மூளையில் சேமித்து அடுத்தடுத்த சந்ததிக்கு கடத்தி கொண்டிருக்கிறீர்கள்.

நீங்கள் தான் இந்த மனித குலத்தின் மீட்பர்கள் காவலர்கள். உங்களால் தான் நம்முடைய இனம் அழியாமல் காக்கப்படவுள்ளது. வாழ்த்துகள் அனைவருக்கும். இதே பெருமிதத்துடன் உங்களுடைய தொன்மைகளை இன்னும் தெரிந்துகொள்ள எத்தணியுங்கள். உங்களுக்கு இன்னும் 30 நாட்கள் நேரமிருக்கிறது. 31ம் நாள் அனைவரும் ஆய்வகத்திற்கு அழைத்து வரப்படுவீர். அன்றிலிருந்து உறுப்பு மாற்று சிகிச்சையும் மற்றும் எர்த்-2வில் இருப்பதற்கு தேவையான பயிற்சியும் கொடுக்கப்படும். சரியாக இன்றிலிருந்து 100ம் நாள் நீங்கள் அனைவரும் எர்த்-2வில் இருப்பீர்கள். நன்றி மீண்டும் சந்திப்போம்.

நிலன், எனக்கு சில சந்தேகங்கள் சேர்ந்து கொண்டது. கேளு சாரல். அது எப்படி இந்த மொழி குடும்பத்தினர் அவர்களின் தொன்மையை அக்காலம் முதல் கடத்திக் கொண்டு வருகிறார்கள் மற்றும் இவர்களால் புது பூமியை படைக்க இயலும் என எப்படி நம்புகிறீர்கள். என்னை போன்ற இயந்திரமே நீங்கள் சொல்லும் கட்டளையை செய்திடும் பிறகு எதற்கு இந்த 5 மொழிக்குடும்பத்தாரும் இத்திட்டத்திற்கு தேவை? இவர்களை நேரடியாக நிலவிற்கு அழைத்து செல்ல வேண்டியது தானே. பிறகு எதற்கு எர்த்-2 திட்டம். அப்பறம் ஏற்கனவே கேட்ட சென்னை மற்றும் S.ஜானகி பற்றிய சந்தேகங்கள் வேறு தீர்க்கப்பட வேண்டும்.

சொல்கிறேன் சாரல். நாம் ஏற்கனவே அனைத்து உறுப்புகளுக்குமான மாற்று செயற்கை உறுப்பை கண்டுபிடித்துவிட்டோம். மூளைக்கு மட்டும் கண்டறிய இயலவில்லை. அந்த

ஆராய்ச்சியில் இருக்கும் பொழுது தான் எனக்கு இந்த ‘‘நிலவை நோக்கி’’ திட்டத்தின் வடிவமைப்பாளராகும் வாய்ப்பு என்னுடைய HumanChip நிறுவனமான குவாண்டம் சிப்பிடமிருந்து வந்தது. அது மட்டுமல்ல இவ்வுலகை Humanchips மூலம் கட்டுக்குள் வைத்திருக்கும் இரு நிறுவனமுமான குவாண்டம் மற்றும் ரே இருவரும் இணைந்து இத்திட்டத்தை செயல்படுத்துகிறார்கள்.

ஏற்கனவே அவர்கள் பலகட்ட முயற்சிகளை நிலவில் செய்துவிட்டனர். மனிதர்களை அனுப்பினால் அவர்களால் அச்சூழலில் வாழ இயலவில்லை. அதே நேரத்தில் உன்னை போன்ற எந்திரங்களை அனுப்பினால் அவைகள் நிலையான சிந்தனையைக் கொண்டே செயல்பட்டன. அதனைத் தாண்டி அவற்றால் சிந்தித்து செயல்பட இயலவில்லை. அதனால் அவர்களால் அடுத்தகட்டத்திற்கு நகர இயலவில்லை.

அன்றைய கூட்டத்தில் நிலவு திட்டத்திற்காக அவர்கள் செய்த அனைத்து சோதனைகளையும் என்னிடம் தெரிவித்து ஆலோசனை கேட்டனர். அதற்கு நான் ‘‘மனிதனுடைய மூளை சராசரியாக 4 சதவிகிதம் செயல்படுகிறது. மீதமுள்ள 96 சதவிகிதம் பயன்படுத்தப்படாமலே உள்ளது. வரலாற்றில் ஒரு சிலரின் மூளை தான் 8 சதவிகிதம் வரை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனை கண்டறிந்து மூளையை பெரும்பான்மையாக செயல்பட வைத்தால் நீங்கள் எதிர்பார்ப்பது நடக்கலாம். நான் தற்பொழுது மூளை பற்றிய ஆராய்ச்சியில் தான் இருக்கிறேன். சிறிது காலம் கொடுங்கள், விரைவில் உங்களை தொடர்பு கொள்கிறேன் என்று சொல்லி வந்தேன்.

அவர்களும் அவர்களுடைய ஆராய்ச்சியின் விளைவினால் நேரடியாக மனிதர்களை நிலவில் குடியமர்த்த இயலாததையும் அதற்கு முன் நிலவின் சூழலும் பூமியை போன்ற சூழலும் கலந்து இருக்கும் வண்ணம் இந்த எர்த் -2 வடிவமைப்பை செய்ய ஆரம்பித்தனர். நானும் மூளையை பற்றிய ஆராய்ச்சியில் மூழ்கினேன். அப்பொழுது தான் என் மூளையில் ஓர் பகுதி அதிகமாக இருப்பதை கண்டறிந்தேன். அப்பகுதி மற்றவர்களின் மூளையில் இல்லை. உடனே இத்தகவலை குவாண்டம் மற்றும் ரே சிப் நிறுவனத்தாரிடம் தெரிவித்தபொழுது அவர்கள் தங்களுடைய HumanChip Controller மூலம் உலகத்தில் உள்ள அனைவரின் மூளையையும் ஆராய்ந்து என் மூளை போல் உள்ளவர்களை தனியாக பிரித்தனர். அவர்களிடம் உள்ள ஒற்றுமையை ஆராயும்பொழுது அவர்கள் அனைவரும் இந்த தொன்மையான 5 மொழி குடும்பத்தை சார்ந்தவர்கள் என்பது தெரிய வந்தது. இந்த மூளையின் அமைப்பினால் தான் இவர்கள் அனைவரும் தங்களுடைய மொழியை இவ்வளவு காலம் காப்பாற்றி தக்க வைத்து கொள்வதையும் உணர்ந்தோம்.

அதன்பிறகு என்னுடைய மூளையையே சோதனைக்காக பயன்படுத்த ஆரம்பித்தேன். என்னுடைய மூளையில் நடக்கும் அனைத்தும் என்னுடைய HumanChipஇல் சேமிக்கப்பட்டன. அதே நேரத்தில் என்னை போல் உள்ள இன்னும் 3 வடிவமைப்பாளர்களை கொண்டு என்னுடைய குவாண்டம் நிறுவனம் என் மூளையின் சோதனையை கண்காணிக்க ஆரம்பித்தது.

அன்றைய சோதனையில் என்னுடைய மூளையின் அப்பகுதியை சில புற சமிக்கை

கொண்டு தூண்டினேன், ஏதோ புது உலகிற்கு போனது போல் இருந்தது. ‘‘டேய் வண்டிய நிறுத்துடா , அங்க பாருடா ஒருத்தன் தென்னைமரத்துல நடந்து ஏறுறான். எங்கைய்யா. இதோ அங்க பாருடா. அட ஆமாய்யா. வாடா போய் பாக்கலாம். யாருங்க? யாரு கொள்ள பக்கம்? யம்மா நான் சென்னைலேந்து வரேன், இப்படியே போயிட்டு இருந்தேன், தோ அவர் மரம் ஏறுறத பார்த்துட்டு வண்டியை நிறுத்திட்டு வந்துட்டேன். யாரும்மா அது, அதிசயமாஇருக்கே. எப்படி இப்படி நடந்து போறாரு கீழேந்து மேல.

அத ஏன்யா கேக்குறீங்க அவர் எம்புருஷன் தான் என்னன்னவோ பண்ணுவாருயா. எப்படினு தான் யாருக்கும் புரியல, அவருக்கும் தெரியல. இப்ப கூட ஏதோ புயல் வருது மரத்துக்கெல்லாம் ஆபத்துனு காலைலேந்து இப்படி ஏறி பச்சைமட்டையெல்லாம் வெட்டி ஏதோ கயிறால உச்சியை கட்டிட்டு இருக்கார். யாருக்கும் ஒன்னும் புரியல இவர் செய்றாருனு ஊர்ல உள்ளவங்க எல்லாம் செய்ய போறாங்க.
இவருக்கு அவ்வளவு மரியாதையாம ஊருக்குள்ள. அட நீங்க வேற எல்லாம் இவரை பைத்தியம் மாதிரி தான் பார்க்கும். போன சுனாமி அப்ப இவர் அதுக்குமுன்னாடியே ஊர்ல உள்ள படகெல்லாம் எடுத்து கட்டிவைக்க சொல்லி எல்லோரையும் தூரமா போய் தங்க சொன்னாருய்யா. யாரும் கேக்கல. கொஞ்ச பேரு தான் கேட்டோம். இப்ப நாங்க மட்டும் தான் இந்த ஊர்ல உயிரோட இருக்கோம். மீதிஎல்லோரையும் சுனாமி வாரிக்கிட்டு. அன்னைலேந்து இவர் சொல்ற எல்லாத்தையும் நம்ம மக்கள் கேக்க ஆரம்பிச்சிட்டாங்க.

இதை எல்லோரோடயும் சொல்ல வேண்டியது தானேம்மா , அவங்களும் அவங்க மரத்தை காவந்து பண்ணுவாங்கள. எதுக்குய்யா சுத்துவட்டாரமும் இவரை பயித்தியம்னு சொல்லவா. ஆனா இவர் சும்மா இருக்க மாட்டார். புயல் வருதோ இல்லையோ, வர வரை அதுக்காக என்னென்ன செய்யணுமோ எல்லாத்தையும் போய் எல்லாருக்கும் செஞ்சிட்டு தான் வருவார். இருங்கய்யா கூப்பிடுறேன். கீழ எறங்குறார். விட்டுட்டா அடுத்த மரம் ஏறிடுவார்.

டேய் சென்னைக்கு போன் போட்டு எதாவது புயல் வரப்போகுதான்னு விசாரிக்க சொல்லுடா. சரிய்யா. வாங்கண்ணே யாரோ சென்னைலேந்து வந்துருக்கீங்களாம் ஜானு சொல்லுச்சு. நீ மரம் ஏறுறத பார்த்து ஆச்சரியமா வண்டிய நிறுத்திட்டு வந்தோமப்பா. உன் பேரு என்ன. ராமுங்க என் பேரு. நல்லதுப்பா. ஆமாம் எப்படி உன்னால இப்படி தென்னை மரத்துல நடந்தே ஏறமுடியுது. சுனாமி உனக்கு முன்னமே தெரிஞ்சிருக்கு. புயல் ஏதோ வர போகுதுனு சொல்றியாம். ஆமாய்யா இந்த காத்து வானம் பாம்பு பறவை விலங்குகள் என எல்லாத்தையும் பாத்தே என்னால சொல்ல முடியுதுயா. அது எப்படினு தெரியல.

தென்னைமரமெல்லாம் சும்மா நானே நடந்து பழகுனதுய்யா. கீழ நடக்குறப்ப ஏன் குத்துக்க நடக்க முடியாதுனு நானே நெனச்சேன், என்னைய நானே சம படுத்திகிட்டு ஏறிட்டேன்யா. டேய் போன் அடிக்குது பாரு. ஐயா சென்னைலேந்து ஏதும் அப்படி ஒரு தகவல் இல்லைனு சொல்லிட்டாங்க. அப்டியா. தம்பி ராம் எப்ப புயல் அடிக்கும்னு நீ நினைக்கிற. இன்னும் 10லிருந்து 12 நாளுலையா. நல்லதுப்பா. பார்த்துக்க நாங்க கிளம்புறோம்.

என்னங்க இருங்க சாப்பிட்டு போய் அடுத்த மரத்துல ஏறுங்க. இருடி இன்னும் 4 மரம் தான் பாக்கி இருக்கு முடிச்சிடுறேன். சாப்பிட்டு போங்க என்ன அவசரம். இல்லடி முடிச்சிட்டு

அப்படியே எல்லா வீட்டுக்கும் போய் செய்யணும். வீட்டுக்கு பக்கத்துல உள்ள மத்த மரத்தோட கிளையெல்லாம் கழிக்க சொல்லணும். எல்லாம் போகலாம் கை கழுவிட்டு வாங்க சாப்பிடலாம். சொன்னா எங்க கேக்க போற இரு வரேன். எடி ஜானு யமுனை ஆற்றிலே பாடுடி. அட இது என்ன எழவா போச்சு. அந்த 96 படம் பாத்ததிலிருந்து அதே பாட்ட கேட்டுகிட்டு. பாடுடி. ‘‘யமுனை ஆற்றிலே ஈர காற்றிலே..’’.

இப்பாடலை கேட்டதும் என்னுள் ஏதோ ஓர் உள்ளுணர்வு எழுந்து என்னை நிகழ் காலத்திற்கு கொண்டுவந்தது போன்று இருந்தது. ஆனால் என்னால் எழ இயவில்லை. சிறிது நேர அமைதி. அப்படியொரு அமைதியை நான் உணர்ந்ததே இல்லை. நான் எங்கிருக்கிறேன் நான் யார் என ஒன்றும் புரியாத குழப்ப நிலையில் இருந்தபொழுது திடீரென எல்லாம் பத்தரமா இருந்துக்கோங்க. இன்னைக்கி ராத்திரி எல்லாம் இங்கயே பள்ளில இருந்திடலாம். காலைல போய் எதுனாலும் பார்த்துக்கலாம். சரிப்பா ராமு. இங்னவே இருந்திடுவோம். ஏ என்னப்பா ஊர்ல உள்ள எல்லா தலையும் வந்துட்டா. எல்லாம் வந்துட்டாங்கய்யா இந்த ராமு வீட்ல எங்க தங்க விட்டான். டேய் ராமு புயல் மட்டும் அடிக்காம போகட்டும் அப்பறம் இருக்கு.

அனைவரும் தூங்கி போனார்கள். விடியற்காலை பேய் சத்தத்துடன் காற்றடிப்பதை கேட்டு அனைவரின் தூக்கமும் கலைந்து எழுந்து உட்கார்ந்தனர். காற்றின் கோர சத்தம் கேட்டதும் அனைவரின் பார்வையும் ராமின் மீதே பட்டது. யய்யா ராமு நீ சாமியா. நல்லா இருக்கணும்யா நீ. கெழவி சும்மா கெட. காலைல போய் பார்ப்போம்.

விடிந்து வீதியில் நடக்கும் பொழுது எல்லா மின்கம்பங்களும் ஒடிந்து விழுந்திருந்தன. பல மரங்கள் சாய்ந்திருந்தன, ஆயினும் தென்னை மரங்களுக்கோ, வெட்டிய பச்சை மட்டையை வீட்டின் கூரையின் மீது போட்டிருந்ததால் பெருவாரியான பாதிப்பு இல்லாமல் இருந்தது. அனைவரும் கண்ணீர் மல்க ராமுவுக்கு நன்றி தெரிவித்தனர்.

பக்கத்துக்கு ஊர்களின் நிலை கேட்கவென்னா துயரில் இருந்தது. பலரின் வீடுகளும் தென்னம் தோப்புகளும் படகுகளும் என பெருத்த சேதம். அந்த சுத்துவட்டாரத்திலேயே ராமுவின் ஊர் மட்டும் தான் பிழைத்தது. ராமுவுக்கு ஜானுவின் யமுனை ஆற்றிலே பாட்டை கேட்டதை போன்ற நிம்மதி மனசில் ஏற்பட்டது. நிலன்! You got a call என்ற அழைப்பை கேட்டு திடுக்கிட்டு எழுந்தேன். இவ்வளவு நேரம் நான் இருந்த உலகம் கனவாக தோன்றவில்லை. நானே ராமுவாக இருந்தது போன்ற நினைவை எனக்கு ஏற்படுத்தியது. எதுவுமே எனக்கு மறக்கவில்லை. அந்த அழைப்பை பேசிவிட்டு என்னுடைய Humanchipஇல் 96 திரைப்படம், யமுனை ஆற்றிலே , அப்படம் வந்த ஆண்டு, அதன் பிறகான புயல், அதனால் ஏற்பட்ட சேதம், அப்புயலில் அதிகம் பாதிக்காத ஊர் என அனைத்து தகவல்களையும் தேடி கண்டுபிடித்துவிட்டேன். அப்புயலின் பெயர் கஜா.

ஓ புரிகிறது நிலன். ஆமாம் எப்படி உங்களுக்கு 200 வருடத்திற்கு முன்பு நடந்த சம்பவம் நிஜத்தில் நடப்பதுபோல் வந்தது. அது தான் எனக்கு பெரும் ஆச்சர்யமே சாரல். அன்று நடந்ததை என்னுடைய HumanCHipஇல் இருந்து மீண்டும் மீண்டும் சோதித்தேன், என்னை போன்று மற்ற 3 வடிவமைப்பாளர்களும் சோதித்தனர். அதில் என் மூளையில் உள்ள அந்த

பகுதி அந்நேரத்தில் முழுவதும் செயல்பட்டதை எங்களால் உணர முடிந்தது. ஆனால் இத்தகவல்கள் ஏற்கனவே எங்கோ கேட்டிருப்பேன் அல்லது படித்திருப்பேன் என அவர்கள் மூவரும் முடிவிற்கு வந்தனர். ஆனால் என்னால் அதனை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. அதை படித்தோ கேட்டதாகவோ எனக்கு நினைவில் இல்லை. என்னுடைய HumanChipஐயும் தேடி பார்த்தேன், இதககவல்களை இன்று தான் அதில் தேடியுள்ளேன் என சொன்னது.

இதை பற்றி மேலும் படிக்க ஆரம்பித்து, இதுபோன்ற நிறைய பேர் உலகில் வாழ்ந்துள்ளதை அறிந்தேன். அவர்கள் அனைவரும் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் என கூறி அவர்களுக்கு சிகிச்சை பெருவாரியாக கொடுக்கப்பட்டுள்ளது. அவர்களுக்குள்ள ஒற்றுமையை ஆராயும் பொழுது அவர்கள் அனைவரும் இந்த 5 மொழி குடும்பத்தை சார்ந்தவர்கள் என்பது புலப்பட்டது.

நம் தமிழ் மொழியை சார்ந்த ராஜ ராஜ சோழன், ராஜேந்திர சோழன் போன்றோர் சுமார் 1300 ஆண்டுகளுக்கு முன்பாகவே காற்றின் போக்கு மற்றும் திசையை கொண்டே நிலம் எந்த பக்கம் இருக்கும், புயல் மழை போன்ற இயற்க்கை சீற்றங்கள் என அனைத்தையும் கணித்து பல கடல் பயணங்களை மேற்கொண்டு பல நாடுகளை தங்கள் ஆட்சியின் கீழ் கொண்டுவந்துள்ளனர். இதே திறமை தான் ராமுவிடமும் இருந்தது. எனக்கு அப்பொழுது தான் ஓர் பொறி தட்டியது. இந்த மொழி குடும்பத்தில் உள்ளோர்களின் மூளையில் எனக்குள்ளதுபோன்ற சிறப்பு பகுதி உள்ளது. தொன்ம நிகழ்வுகள் அதில் பதிகின்றன. இது அடுத்தடுத்த சந்ததிக்கு கடத்த படுவதும் புரிந்தது.

இதனை உறுதிப்படுத்தி கொள்ள என்னுடைய மூளையின் அந்தப்பகுதியை இன்னும் தூண்ட முடிவெடுத்தேன். நானே அத்தூண்டல் நடைபெற வேண்டிய நேரத்தை நிர்ணயித்தேன். இல்லையேல் நான் நிகழ்காலத்திற்கு மீளாமல் அக்காலத்திலேயே உடல் சோர்வுறும் வரை வாழ்ந்திட கூடும். தூண்டினேன்.

மன்னா காவிரியின் வெள்ளம் இம்முறை நீங்கவல்லா துயரத்தை ஏற்படுத்திவிட்டது. நாம் பாதுக்காப்பாக மக்களை அப்புறப்படுத்தியிருந்தாலும் நம் மக்களின் வீடுகள் அடித்து செல்லப்பட்டன. விளைநிலங்களில் வண்டல் மண் படிந்து உடனடியாக உழவு செய்ய இயலாத சூழல் ஏற்பட்டுள்ளது.

அமைச்சரே நானும் வெகு நாட்களாக யோசித்துவந்தேன். இதற்கு ஒரு வழி செய்ய வேண்டும் என்று நம்முடைய பொறியாளர்களிடமும் அறிவுறுத்தியுள்ளேன். சாதாரண நாட்களில் ஆற்றுநீர் காவிரி வழியும், நீர் அதிகமாகும் காலங்களில் பெருவாரியான நீர் கொள்ளிடம் பக்கமும் போகும்படி செய்ய அறிவுறுத்தி இருந்தேன். அதற்கான சரியான வழிமுறை தான் கிட்ட வில்லை என்றனர். உடனே தலைமை பொறியாளரை அழைக்கவும்.

மன்னா வணக்கம். இவ்வெள்ளம் பெரும்துயரை தந்தமைக்கு மன்னிக்கவும். எங்களால் இதனை தடுக்க இயலவில்லை. உங்களின் அறிவுருத்தல் படி நீரை மடை மாற்றும் வழிகளை தான் ஆராய்ந்துக் கொண்டுள்ளோம். நீர் வடிந்தால் நீங்கள் சொல்வது போல்

சிறப்பாக செய்திடலாம். ஆனால் அதற்கான வாய்ப்பில்லை. புதிதாக ஆற்றுப்பாதை அமைத்தாலும் அது சிக்கலை தான் ஏற்படுத்தும் அது தான் யோசனையாக உள்ளது.

பொறியாளரே புதியபாதை வேண்டாம் அது நிலத்தின் தன்மையையும் ஆற்றின் ஓட்டத்தையும் பாதித்திடும். இருக்கும் இடத்தில் நான் சொல்வது போன்று நீரை மடை மாற்ற வேண்டும் அவ்வளவு தான். கொள்ளிடம் பக்கம் உயர்ந்தும் காவிரி பக்கம் சறுகளாகவும் ஓர் கட்டுமானம் வேண்டும். நீர் குறைவாக வரும்பொழுது சறுகளுள்ள இடம் நோக்கி நீர் தானாக செல்லும், அது காவிரி பாதை. நீர் அதிகமாகும் பொழுது அந்த சறுகளுக்கு மேலே மடையை போன்ற அமைப்பை ஏற்படுத்தி கொள்ளிடம் நோக்கி செய்ய வைக்க வேண்டும்.

புரிகிறது மன்னா. ஆனால் நீரோட்டம் உள்ள பொழுது எப்படி செய்வது. பொறியாளரே, நீங்கள் சுண்ணாம்பு கரைசலை பாறைகளில் தடவி இருபக்கத்திலிருந்தும் போட்டு கொண்டே வாருங்கள். மண் அரிப்பை தாண்டி அப்பாறைகள் நிலையாக இருக்குமெனில் அதனையே வழிமுறையாக கொண்டு அணையைக் கட்டிடலாம். மிக சிறப்பு மன்னா. நீங்கள் அனைத்து துறையிலும் வல்லவர் என்பதை மீண்டும் எங்களுக்கு வழிகாட்டி சிறப்படைந்து விட்டீர்கள். நல்லது பொறியாளரே. வேலையை உடனே ஆரம்பியுங்கள் நான் இரு திங்களில் வந்து பார்க்கிறேன். நல்லது மன்னா நாங்கள் விடைபெறுகிறோம். ஆகட்டும் பொறியாளரே.

வென்னிகுயத்தியாரே, நான் சொன்னதை குறித்து கொள்ளுங்கள். நான் சொன்ன வழிமுறை சரியாக வருமென்றால் இந்த அணைக்கு ஓர் பெயர் வைக்க வேண்டும். என்ன பெயர் வைக்கலாம் சொல்லுங்கள். உங்கள் பெயரிலேயே அழைத்திடலாமே மன்னா. வேண்டாம் பொதுவான பெயராக இருக்கட்டும். நாம் செய்யும் செயல்களை மட்டும் அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்வோம். அதன் மூலம் மேலும் அவர்கள் சிறப்பாக விளங்கட்டும், கல்லால் செய்யும் அணை என்பதால் கல்லணை சரியாக இருக்கும் என நினைக்கிறேன் குயத்தியாரே. அப்படியே மன்னா. சிறப்பாக உள்ளது.

நல்லது குயத்தியாரே, உங்களின் தேடல் எந்த நிலையில் உள்ளது. நம் தமிழ் சமூகத்தின் தொன்மங்களை தேடும் பணி எந்தளவில் உள்ளது. நாம் என்னென்ன கண்டறிந்துள்ளோம். மன்னா, நமக்கு கிடைத்த சான்றுகளைக் கொண்டு கணித்ததில் நம்முடைய இனம் தான் உலகின் மூத்த இனமாக இருந்திருக்க வேண்டும். இடையில் ஏற்பட்ட பல இயற்கை சீற்றம் மற்றும் அந்நிய மோதல்களால் பெருவாரியான தகவல்கள் அழிக்கப்பட்டுள்ளன. உலகில் தோன்றிய இனங்களில் முதல் பிரிவென்பது ஓரிடத்தில் வாழ்ந்த மக்களுக்குள்ளும் நாடோடியாக வாழ்ந்த மக்களுக்கும் ஏற்பட்டதாகவே தெரிகிறது. நாம் ஓரிடத்தில் வாழ ஆரம்பித்து வீடு வணிகம் உழவு என அனைத்திலும் நம்மை மேம்படுத்தி நாகரீகமாக வாழ்ந்தவர்களின் வழி வந்த இனம். எதிர் தரப்பினர் நாடோடியாக வாழ்ந்து ஓர் கட்டத்தில் அது இயலாமல் அவர்களும் நம்மை பார்த்து ஓரிடத்தில் வாழ ஆரம்பித்துவிட்டனர்.

சிறப்பு குயத்தியாரே, அனைத்தையும் ஆதாரத்துடன் எழுதுங்கள். வரலாறு மிக முக்கியம். வரலாற்றை அறியாமல் வரும் காலத்தை நம்மால் சிறப்பாக்க இயலாது. நம்மை போன்ற

தொன்மகுடிக்கு இது மிக முக்கியம். அப்படியே நம்முடைய வாழ்க்கைமுறை, தொழில்நுட்பம், கட்டிடக்கலை, பழக்கவழக்கம், போர்முறை என அனைத்தையும் வரும்காலம் அறியும் வகையில் எழுதிடுங்கள். ஆம் மன்னா அனைத்தையும் எழுதிவிட்டேன் அது தற்பொழுது நிலன் Time க்க என்ற குரல் கேட்டு திடுக்கிட்டேன். அவற்றிலிருந்து வெளியேறிய துக்கத்திலிருந்து என்னால் அப்பொழுது எழுந்திருக்கவே இயலவில்லை. அவர் ஏதோ தமிழினத்தின் தொன்மைகளை குறித்துள்ளதாக சொன்னார். அதை பற்றிய விவரம் தெரிவதற்குள் நான் நிர்ணயித்த நேரம் முடிந்துவிட்டது. ஒருவேளை இன்னும் சிறிது நேரமிருந்திருந்தால் அது எங்கு வைக்கப்பட்டது என தெரிந்திருக்கும். அத்தகவல்களை தேடி பார்த்தேன். அந்த மன்னனின் பெயர் கரிகால் சோழன் என்று தெரிய வந்தது.

2300 ஆண்டுகளுக்கு முன்பாகவே நீர் பாசனத்தில் இவ்வளவு அறிவும் அக்கறைக்கும் கொண்டிருந்தார்கள் எனில் மிக பெரும் ஆச்சர்யம் தான். ஏனைய இனங்கள் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன் தான் இந்த சிந்தனைக்கே வந்துள்ளன. எனில் நம் தமிழ் இனம் எவ்வளவு தொன்மை கொண்டது என்பதை புரிந்து கொள்ள முடிந்தது. என் மொழியையும் என் இனத்தையும் நினைத்தால் அவ்வளவு பெருமையாக உள்ளது. ஆனால் குயத்தியார் சொன்னது போன்ற தகவல் களஞ்சியம் எங்கும் கிடைக்க பெற்றது போல் தெரியவில்லை.

ஆம் நிலன், நீங்கள் சொல்வது சரி தான்.  இதுபோன்ற தொன்மையான மொழி குடும்ப மக்களை நீங்கள் தேர்ந்தெடுத்தது எவ்வளவு சரியான முடிவென்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. புதிய பூமி என்றைக்கும் உங்களுக்கு நன்றி சொல்லும். என்ன முக்கிய இடத்தில் எழுந்துவிட்டீர்கள்  இல்லையென்றால் குயத்தியார் சொன்ன தகவல் களஞ்சியம் எங்கிருக்கிறது என தெரிந்திருக்கலாம். ஆனால் அதெல்லாம் இப்பொழுது இருக்குமா என்று நிச்சயம் இல்லையே, நீங்கள் தான் பெருவாரியான நிலங்கள் கடலுக்குள் சென்றுவிட்டது என்றீரே. ஆமாம் சாரல் நீ சொல்வது சரி தான். நீ கேட்டாயே சென்னை நகரம், அதுவும் கடலுக்குள் சென்றுவிட்டது தான். அது தான் தமிழ்நாட்டின் தலைநகராக இருந்தது. கடந்த 200 ஆண்டுகளில் சுமார் 150கிமீ தூரம் கடல் ஊருக்குள் வந்துவிட்டது. இன்னும் 50 ஆண்டுகளில் நாம் இருக்கும் மேற்கு தொடர்ச்சி மலையை தவிர அனைத்தும் கடலுக்குள் சென்றிடும்.

இதற்கு முக்கிய காரணம் நம் மக்கள் சுரண்டிய இயற்கையும், பயன்படுத்திய வரம்பு மீறிய தொழில்நுட்பமும் தான். இதனை கணக்கில் கொண்டு தான் நிலவில் கால் வைத்தது முதல் முழுக்க முழுக்க இயற்கை சார்ந்த வாழ்வு வாழ வேண்டும் என முடிவெடுத்து அதற்கான ‘‘நிலவு திட்டம்’’ ஏற்படுத்தப்பட்டது. அப்படி எனில் நாங்கள் இயற்கை இல்லையே எங்களை என்ன செய்வீர்கள் நிலன். சாரல், நீங்கள் இயற்கை இல்லை தான் அதே நேரத்தில் நீங்கள் எங்களால் உருவாக்கப்பட்ட தொழில்நுட்பம் உங்களை எந்தவகையில் பயன்படுத்த இயலுமோ அந்தவகையில் பயன்படுத்துவோம் இயற்கைக்கு பாதிப்பு ஏற்படா வண்ணம்.

மிக்க மகிழ்ச்சி நிலன். நீங்கள் தேர்ந்தெடுத்த 5000 பேருக்கும் உங்களை போன்ற தூண்டலை ஏற்படுத்த போகிறீர்களா? இல்லை சாரல். ஏற்கனவே மீதமுள்ள 4 மொழி குழுக்களில் தலா ஒருவரை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு இதே தூண்டலை நடத்தி

பார்த்தோம். அவர்களுக்கும் என்னை போன்றே அவர்களின் தொன்மம் புலப்பட தொடங்கிற்று. இதனை கொண்டே நாங்கள் அனைவருக்குமான செயல் திட்டம் உருவாக்கிவிட்டோம். அதனடிப்படையில் இவர்கள் 5000 பேருக்குமான பயிற்சி வகுப்புகள் நம் ஆராய்ச்சி கூடத்தில் நடத்தப்படும். அவர்களுக்கு அனைத்து தொன்மங்களும் வகுப்புகளாக நடத்தப்பட்டு அவர்களின் சிந்தனை தூண்டப்படும். அதன்மூலம் அவர்கள் எர்த் -2 வை நிர்ணயிப்பார்கள்.

ஏன் நிலன். அனைவருக்கும் உங்களை போன்றே மூளையை தூண்ட வேண்டியது தானே. செய்யலாம் சாரல், அதில் சில சிக்கல் உள்ளது. இந்த 5 மொழி குடும்பத்தாரும் ஒவ்வொரு கட்டத்தில் தங்களுக்குள் சண்டையிட்டுள்ளனர். அது தெரியும் பட்சத்தில் இச்சண்டைகள் அவர்களுக்குள் பகைமையை ஏற்படுத்த கூடும். அதனை தடுக்கும் பொருட்டே தேவையானவற்றை மட்டும் அவர்களுக்கு சொல்லி அதன்மூலம் அவர்களின் சிந்தனையை தூண்ட போகிறோம். சிறப்பு நிலன். உங்களை நினைத்தால் எனக்கு மிக பெருமையாக இருக்கிறது.

நன்றி சாரல். நிலன், கடைசியாக ஒரே ஒரு கேள்வி, உங்களுக்கு அந்த பலியுணர்வு வந்துவிட்டால் என்ன செய்வது. சாரல், ‘‘அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து இன்புற்றார் எய்தும் சிறப்பு’’.

நன்றி,

- ரா.ராஜராஜன்,
மன்னார்குடி

**ம. ரோகிணி**
அவர்கள்
கைவண்ணத்தில்



# தென்னையும் நானும்

இருட்டிப் போன வேளையிலே
கண்ண கொஞ்சம்
அசந்திருந்திருந்தேன்
என்னவோ ஏதோ மனசுக் கிடந்து
தவிச்சிது
தூக்கம் மட்டும் ஏனோ தலையணை
பகுதி அடையல

பகலவன் பாக்குற நேரத்துல
சேவல் கூவ மறந்துருச்சு
சத்தம் இன்றி செவிகளும்
அமைதி சகவாசம் அடையுது

எட்டிப் பார்த்தேன் வெளியிடயில்
கண்கள் நீர்தான் ஊத்தெடுக்குது
காரணம் ஏதும் அறியல
குளிர் ஏதும் உணரல
கைகள் கால்கள் நடுங்குது

நேற்றுப் பார்த்த புள்ளைங்க எல்லாம்
இன்று உயரே ஏனோ காணல
தள்ளி  மெல்ல நடக்கையில
அடிகளில் மட்டும் தட்டுது
என் கால்கள் ரெண்டையும்
வெட்டிப்புட தான்
கைகள் பறக்க ஏங்கி கிறங்குது

தூது வந்து சேரயில
குடிலில் நானும் அடங்கிருந்தன்
உன்ன பத்தி யோசிக்கத்தான்
அடியேன் மூளைக்கு எட்டாம போச்சே

காத்து தானே அடிக்கப்போகுதுன்னு
கவனம் செலுத்த நெனைக்கல
இந்த பாவி பைய முகத்த இப்போ
உன் வேரில் பதிந்து தேக்கிறன்

பெத்த புள்ள கூழு ஊத்த மறந்தும்
நான் இருக்கேன்னு முன்ன வந்து
நின்னியே
தரையில் முறிந்து கிடக்கையிலே
கேப்பாரற்று உன் கூட நிக்கிறன்

ஓர் இரவில் நீயும் எனை பிரிந்தாய்
உன் கூடவே நானும் எங்க வருவன்
வந்தா கூட என் வலி குறையும்
இனி நாளும் வழியில் வலி
கண்டிருவன்.



– த.வா.அஜய்பிரசாத்

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

மன்னையின் மைந்தர்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal Thiravukolmagazine